Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

## EELA NADU

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெக ஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் பிலவ மாசி 20 ஆம் நாள் ரம்ழான் 25 (3-3-62) சனிக்கிழமை இதழ் 21

# பர்மாவில் திடீர் ராணுவ புரட்சி!

## பிரதமர் ஊ நூவும் இதர மந்திரிகளும் கைது

## ஜெனரல் நேவின் புரட்சி சபை ஆட்சியை ஏற்றது

ரங்கூன், மார்ச் 2

**பர்மாவில், ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாயும், பிரதம மந்திரி ஊநூவும் அவரது மந்திரிகளும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.**

**முப்படைத் தளபதியான ஜெனரல் நேவின் திடீர்ப் புரட்சி ஒன்றின் மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்றியபின் தேச மக்களுக்கு இது சம்பந்தமாக ரேடியோச் செய்தி ஒன்றை விடுத்தார்.**

நாட்டில் அரசியல், பொருளாதார நிலை மோசமாகிவருவதால் ராணுவம் செயலில் இறங்கியது என ஜெனரல் நேவின் அறிவித்தார். புரட்சி பற்றி பல மொழிகளில் ஒலிபரப்பு விடுக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவு ராணுவம் செயலில் இறங்கியது அதிகாலை 3 மணி முதல் 5 மணிக்குள் பிரதம மந்திரியும், இதர மந்திரிகளும் கைது செய்யப்பட்டார்கள்.

ரங்கூன் விமான நிலையம் மூடப்பட்டுவிட்டது. ஆயுதபாணிகளான துருப்புகளும், ராணுவ வாகனங்களும் முக்கிய இலக்குகளில் நிறுத்தப்பட்டுள்ளன.

ஷான் தலைவர்கள் தனி

(8-ம் பக்கம் பார்க்க)

## சமூக, மத பிரிவுகள் தியாக உணர்வுடன் நடக்கவேண்டும்

### நாட்டு மக்களுக்கு புதிய கவர்னர் ஜெனரல் செய்தி

கொழும்பு, வெள்ளி

புதிய கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். அதன் பின் அவர் விடுத்த வானொலிச் செய்தியில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தவேண்டும் என்றும், அரசியல், சமூக, மதப் பிரிவுகள் தியாக உணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றும் கூறினார். பிரிந்து சென்று வெற்றி ஈட்டலாம் என்ற மனப்பான்மையால் நாட்டின் ஐக்கியம் பாதிக்கப்படும் என்றும் கூறிய அவர் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் இயன்றவரை நல்ல முறையில் செய்யவிருப்பதாய்க் கூறினார். "அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் விஸ்வாசமுடன் இருப்பேன்" என்றும் கவர்னர் ஜெனரல் கூறினார்.

இன்று கவர்னர் ஜெனரல் கண்டி சென்றபோது அவர் பேராதனை பாலத்தில் வைத்து வரவேற்கப்பட்டார். பின் தலதா மாளிகைக்குச் சென்றார்.

## நரசிம்மனுக்கு மற்றோர் பதவி

ஐ. நா. மார்ச் 2

இந்தியாவைச் சேர்ந்த திரு. வி. வி. நரசிம்மன் ஐ. நா. மகாசபை விவகாரங்களுக்கான துணைக்காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தலைமைக்காரியதரிசியின் ஆலோசனை சபைக்குத் தலைவராக இருக்கும் அவர், தொடர்ந்து அப்பதவியையும் வகித்து வருவார்.

## ராணி மாளிகையை விட்டு சர் ஒலிவர் புறப்பட்டார்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை 6-55-க்கு சர் ஒலிவர் குணதிலக்கா ராணி மாளிகையை விட்டு கொழும்பிலுள்ள தன் சொந்த வாசஸ்தலத்துக்குப் புறப்பட்டார். பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும், இதர மந்திரிகளும் மாலை 4-30-க்கு ராணி மாளிகை சென்று பழைய கவர்னர் ஜெனரலுக்கு விடைகொடுத்து அனுப்பினர்.

பார்லிமெண்ட்

## "குற்றவாளிகள் மகாராணிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம் அந்த உரிமையை அரசாங்கம் மறுக்கவில்லை"

—திரு. பீலிக்ஸ்

கொழும்பு, வெள்ளி

**"நீதிமன்றத்தில் தண்டிக்கப்படும் சதிகாரர்களுக்கு மகாராணிக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் உரிமை அளிக்கப்படும். கிரிமினல் சட்ட திருத்த மசோதா, பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை மறுக்கவில்லை" என நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று பார்லிமெண்டில் பேசும்போது கூறினார்.**

திரு. பாலசுந்தரம்: உரிமையை நீங்கள் பறிக்க முடியாது.

திரு. பீலிக்ஸ்: பின் என்ன செய்திரீகள்? பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமை இருப்பதே அரசாங்கம் இறுதி தீர்ப்பு எதையும் வழங்க உத்தேசிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

திரு. தகநாயக்கா: நேரடியாக எனக்குப் பதிலளிப்பீர்களா? நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் தண்டனையை பிரிவி கவுன்சில் அப்பீல் விசாரணை முடிவுவரையில் நிறுத்தி வைக்க முடியுமா?

திரு. பீலிக்ஸ்: பிரிவி கவுன்சில் அப்பீல் அமுலில் இருக்கும்போது தூக்கிலிடப்பட்ட எவரைப்பற்றியும் உங்களுக்குத் தெரியுமா? அப்பீல் உரிமை இருக்கிறது. எவரும் அதை மறுக்கவில்லை.

இடைவேளைக்குப் பின் திரு. பீலிக்ஸ் பேசும்போது குறிப்பிட்டதாவது:

திரு. தகநாயக்கா பிரதம மந்திரியாக இருந்தபோது காலஞ்சென்ற பிரதமரின் கொலை சம்பந்தமான விசாரணையில் தலையிடவில்லை என்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். அதுதான் இந்த அரசாங்கத்தின் நிலையும். அரசாங்கம் சம்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிரிமினல் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது

### பீலிக்ஸ் - கொல்வின் மோதல்

கிரிமினல்சட்ட விசேஷ மசோதா இன்று 3-ம் முறையாக வாசிக்கப்பட்டு பார்லிமெண்டில் 70 வாக்குகள் சாதகமாகவும் 20 வாக்குகள் பாதகமாகவும் பெற்று நிறைவேறியது. ஸ்ரீமதி ராஜரத்னா வாக்களிக்கவில்லை.

சபையில் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவுக்கும் நிதிமந்திரிக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதின் காரணமாக சபாநாயகர் பலமுறை ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியிருந்தது. இதன் காரணமாக சபை அரைமணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

நிதிமந்திரி, மந்திரிசபைக்குச் சில சிபார்சுகளைச் செய்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோரினார் என்று டாக்டர் கொல்வின் கூறியபோது, இச்சம்பவம் நடைபெற்றது. நிதிமந்திரி சிபார்சு செய்ததாகக் கூறப்பட்ட சில விஷயங்கள் வருமாறு:

(1) கூப்பனுக்குக் கொடுக்கப்படும் அரிசியில் அரைப் படியைக் குறைத்தல்.

(2) குழந்தைகளின் கூப்பன் அரிசியில் மேலும் அரை படியைக் குறைத்தல்.

(3) நெல் உத்தரவாதத்திட்ட விலையை ரூ 12லிருந்து 10 ஆகக் குறைத்தல்.

(4) இறக்குமதியை மேலும் குறைத்தல்.

(5) ஏற்றுமதிக் கட்டணங்களை அதிகரித்தல்.

(6) சர்வதேச மானிட்டரி நிதியிலிருந்து 5.38 கோடி கடன் பெறுதல்.

திரு. பீலிக்ஸ் இதை மறுத்துப் பேசுகையில் இச்சிபார்சுகள் மத்திய வங்கியினால் செய்யப்பட்டதென்றும், தான் அதை நிராகரித்ததாயும், மந்திரிசபையே இறுதி அத்தாட்சி என்றும் கூறினார்.

பார்லிமெண்ட் இரவு 7-30-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. நதல்லியூர்

பிலவ ஆண்டு மாசி மாதம் 20ந் தேதி சனிக்கிழமை (3-3-62) இரவு 11-21 வரை துவாதசி. மாலை 5-24 வரை உத்தராடம். பின் திருவோணம். சித்தயோகம். புதிய தொழில்வகை ஆரம்பிக்கவும், உத்தியோக முயற்சிகளுக்கும், வர்த்தகத்திற்கும் தகுந்த சுப தினமாகும்.

### இன்றுபிறந்தவர்களுக்கு

இவ்வாண்டிலே இவர்களுக்கு தேகாரோக்கியம் பொதுவாக குறைவாகவும், முற்பகுதியில் இதரவழிகளால் கஷ்டமும் பிற்பகுதியில் நன்மையும், குடும்பசுகமும் பணவரவும் காணப்படுகின்றன. பொறுமை, நிதானம், நம்பிநடவாமை அவசியம். தெய்வவழிபாடு இவர்களுக்குத் தேவை. தொடர்ந்து வரும் ஆண்டு இவர்களுக்குநற் பலனைத் தரும்.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: தொழிற் கஷ்டம், கடன்படல்.

பரணி: குடும்பசுகம், பொருள் வரவு

கார்த்திகை. உடல் நலக்குறைவு, தொழிற்தடை.

ரோகிணி: வித்தை லாபம், கடன்வரவு.

மிருகசீரிடம்: பிரயாணசுகம், விவாகப்பேச்சு.

திருவாதிரை: பிரயாணக்கஷ்டம், கவலை.

புனர்பூசம்: குடும்பக்கஷ்டம், உடன்பிறந்தோர் பகை.

பூசம்: குடும்ப நலம், பண வரவு.

ஆயிலியம்: குடும்ப கஷ்டம், பணமுடை.

மகம்: பிரயாணக் கஷ்டம், தொழிற் தடை.

பூரம்: நல்லோர் நட்பு, தொழில் நன்மை.

உத்தரம்: கஷ்டநிலை, தொழிற் தடை.

அத்தம்: குடும்பசுகம், பெண்வழி உதவி.

சித்திரை: குடும்பசுகம், பெருமதிப்பு

சுவாதி: நலக்குறைவு, பணக் கஷ்டம்.

விசாகம்: மாதாவழி உதவி, சுகம்.

அனுஷம்: குடும்ப கஷ்டம், பெண்தொல்லை.

கேட்டை: குடும்ப சுகம், கொண்டாட்டம்.

மூலம்: மறதி, பணமுடை.

பூராடம்: குடும்பசுகம், சந்தோஷம்.

உத்தராடம்: ஊழியர்கஷ்டம், பணமுடை.

திருவோணம்: நல்லோர் நட்பு, மகிழ்ச்சி.

அவிட்டம்: வாகன நன்மை, மதிப்பு.

சதயம்: மனச்சஞ்சலம், கவலைநிலை.

பூரட்டாதி: நல்லோர் நட்பு, மனநிம்மதி.

உத்தரட்டாதி: இழிந்தவராற்கஷ்டம், செலவு.

ரேவதி: சந்தோஷநிலை, பண வரவு.

## ஆசிரியைகளின் இடமாற்றம் அதிபர்கள் மறுப்பு

கொழும்பு, வெள்ளி

தமது கணவர்கள் உத்தியோகம் செய்துவரும் ஊர்களுக்கு இடமாற்றம் கோரிய ஆசிரியைகள் பலருக்கு பள்ளிக்கூட அதிபர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளார்கள் எனத் தெரிகிறது. இடமாற்றம் கோரும் ஆசிரியைகளுக்குப் பதில் ஆசிரியர்கள் வரும்வரை அவர்களை இடமாற்றம் பெற்றுக் கொள்ள அதிபர்கள் மறுத்துள்ளதாக கல்வி இலாக இடமாற்றக் கிளைக்காரியாலயத்துக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இடமாற்றத்திட்டத்தின் கீழ் கணவர்கள் வேலைபார்க்கும் இடங்களுக்கு ஆசிரியைகள் இடமாற்றம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரே தராதரத்துடன் பதில் ஆசிரியர்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கஷ்டங்கள் உள்ளதாகையால் பள்ளிக்கூட அதிபர்கள் மறுப்புக் காட்டுகின்றனர்.

கல்வி இலாகாவின் இடமாற்றத் திட்டத்தின்படி ஆசிரியைகளுக்கு அவர்களது கணவர்களின் ஸ்தலங்களுக்கு இடமாற்றம் கொடுக்கத்தாம் உதவி செய்யவிருப்பதாகவும் ஆனால், ஒரே தராதரமுள்ள ஆசிரியர்களைக் கண்டு பிடிப்பதில் கஷ்டமிருப்பதால் தம்மால் ஒன்றும் செய்யமுடியாதிருக்கிறதாகவும் இடமாற்றக் கிளைக் காரியாலயப் பகுதியினர் அறிவிக்கின்றனர்.

---

## விமானம் விழுந்து நொறுங்கியது 75 பேர் பலி

நியுயோர்க், மார்ச் 2

நியுயோர்க் விமானநிலையத்திலிருந்து லாஸ் ஏன்சல்சுக்குப் புறப்பட்ட அமெரிக்க ஜெட் பிரயாணிகள் விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென வெடித்து தீப்பிடித்து விழுந்து நொறுங்கியது. 1800 அடி உயரத்திலிருந்து இந்த விமானம் நெருப்புச் சுவாலையுடன் விழுந்ததைப் பலரும் பார்த்தனர். 75 பிரயாணிகளுடன் விழுந்து நொருங்கிய இந்த விமானத்திலிருந்து ஒருவர்கூட உயிர் தப்பவில்லை.

## 4 ஆசிரிய கலாசாலைகள் விஸ்தரிப்பு

கொழும்பு, வெள்ளி

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து ஆசிரிய பயிற்சி பெறுபவர்களின் தொகையை குறைத்து 40 சத விகிதத்துக்காவது அதிகரிப்பதற்கு கல்வி இலாகா பரிசீலனை செய்து வலகிறது.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் விஸ்தரிக்கப்படவிருக்கின்றன. ஹிங்குராக்கொடையில் புதிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது.

## தர்மஸ்தாபனங்களுக்கு வரி விலக்கு

கொழும்பு, வெள்ளி

வருடமொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட வருமானமுள்ள தர்மஸ்தாபனங்களுக்கு வரிவிலக்கு அளிக்கும் வகையில் விரைவில் சட்டத்தைதிருத்தி அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திருத்தம் 1959,60-ம் மதிப்பீட்டு வருடங்களிலிருந்து செயல்படுத்தப்படும். நிதி மந்திரியால் இதுசம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிப்பதாவது:

வருடமொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குகுறைவான வருவாயைப் பெறும் ஆலயங்களுக்கும் தருமஸ்தாபனங்களுக்கு வரிவிலக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படும். வழிபாட்டு இடங்களுக்கும் தர்மஸ்தாபனங்களின் இடங்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

மதவேறுபாடுகளின்றி சகல மதஸ்தாபனங்களுக்கும் இவ்வித வரிவிலக்கு அளிக்கப்படும்.

## 118 பிரசவ ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை

கொழும்பு, வெள்ளி

கிராமப்பகுதிகளுக்கான பிரசவ ஆஸ்பத்திரிகள் மொத்தமாக 120 உள்ளன. எனினும் இரண்டு ஆஸ்பத்திரிகளிலேயே டாக்டர்கள் சிகிச்சை செய்கிறார்கள் மற்றைய 118 ஆஸ்பத்திரிகளிலும் அப்போதிக்கரிகளும் மருத்துவ தாதிமாருமே பிரசவங்களைக் கவனித்து வருகின்றனர்.

118 பிரசவ ஆஸ்பத்திரிகளிலும் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு ஒரு மருத்துவ தாதியேனும் இருந்துவருகின்றார். 93 ஆஸ்பத்திரிகளில் மட்டும்தான் அப்போதிக்கரிமார் பிரசவங்களைக் கவனித்து வருகின்றனர்.

இலங்கையிலுள்ள சிகிச்சை நிலையங்களில் கடமையாற்றி வருவோரது புள்ளி விவரங்கள் அண்மையில் எடுக்கப்பட்டபோது மேற்படி உண்மை தெரியவந்தது.

நகரப்பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளில் பிரசவ சிகிச்சைகளுக்கென 180 டாக்டர்கள் கடமையாற்றிவருகிறார்கள்.

கொழும்பிலுள்ள பெண்களுக்கான இரு ஆஸ்பத்திரிகளிலும் 10 வைத்திய நிபுணர்களும் 36 டாக்டர்களும் கடமையாற்றி வருகிறார்கள்.

புதிதாக எடுக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் இலங்கையிலுள்ள வைத்தியர்கள் போதாக்குறையை எடுத்துக்காட்டுகின்றன. என சுகாதார இலாகா வட்டாரங்கள் கூறியுள்ளன.

வேறு வழி எதுவும் இல்லாத காரணத்தால் அப்போதிக்கரிகளும் மருத்துவ தாதிகளுமே கிராமப்பகுதிகளில் பிரசவ சிகிச்சைக்குப் பொறுப்பாக இருக்கவேண்டியுள்ளது.

## மகா சிவராத்திரி விழா ஆலயங்களில் விசேஷ ஏற்பாடு

பருத்தித்துறை, வெள்ளி

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு மகா சிவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும். கதாப்பிரசங்கமும், இன்னிசைக் கச்சேரியும் ஏற்பாடாகியுள்ளன.

**நவாலி**

நவாலியூர் கதிர்காம முருகப்பெருமான் ஆலயத்தில் விரிவுரைகளும் கதாப்பிரசங்கமும் நடைபெறும், திங்கட்கிழமை காலை மகேஸ்வர பூசை.

**வண்ணார்பண்ணை**

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு அபிஷேகமும் ஆராதனையும் நடைபெறும்.

**வேலணை**

வேலணை கிழக்கு பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரி விழா இ. போ. ச, ஊழியர்களாலும் பொதுமக்களாலும் நடாத்தப்படும்.

**கொடிகாமம்**

கொடிகாமம் மீசாலை வடக்கு கட்டைபறித்தான் சித்தி விநாயகர் ஆலயத்தில் சிவனடனம், சங்கீத கததப்பிரசங்கம், சொற்பொழிவுகள். மேளக்கச்சேரி ஆகியன நடைபெறும்.

## அம்மை நோயினால் மரணமடையவில்லை

வெல்லம்பிட்டியா, வெள்ளி

வெல்லம்பிட்டியாவைச் சேர்ந்த 11 வயதுமாணவி பி. பி. இந்திரபாலா லேடிறிஜவே ஆஸபத்திரியில் அம்மைநோயினால் இறந்தாளெனச் சந்தேகிக்கப்பட்டது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அவள் இறந்தபின்னர் நடத்தப்பட்ட ஆராய்வின்படி அவள் அம்மை நோயினால் இறக்கவில்லையெனத் தெரியவந்துள்ளது.

அவள் இறந்ததற்கான முக்கிய காரணம் போஷாக்குக் குறைவே என சுகாதார இலாகாவினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

---


தேவை

யாழ்ப்பாணம் மாவட்ட புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம்

இச் சங்கம் தயாரிக்கும் சுருட்டுகளை விற்பனை செய்வதற்கு அனுபவம் நிறைந்த விற்பனவுப் பிரதிநிதி ஒருவர் தேவை. தராதரம் 40 வயதுக்குள்பட்டவரும், ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தவரும் சிங்களத்தில் நன்றாக சம்பாஷிக்கக் கூடியவருமாய் இருத்தல் வேண்டும்.

பிணை: காசுப்பிணை ரூபா 1000, விமாட்பிணை ரூபா 2000, ஆதனப்பிணை ரூபா 7000 செலுத்த வேண்டும்.

சம்பளம் மாதமொன்றுக்கு ரூபா 200 சம்பளமும், விற்பனையில் 2% கொமிஷனும், விற்பனவுக்காக வெளியூர் செல்லும் நாட்களில் நாளொன்றுக்கு ரூபா 5-00 வீதம் படிச் செலவும் அளிக்கப்படும்.

12-3 62 நண்பகல் 12 மணிக்குமுன் நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆ. நடராசா, மனேஜர், யாழ்ப்பாணம்.



உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 16 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்


## தமிழ்நாடு சட்டசபை பொதுத் தேர்தல் - 1962

மொத்த இடங்கள்: 206 (ஒரு தொகுதியில் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது)

அறிவிக்கப்பட்ட முடிவுகள்: 205

| | |
|---|---|
| 205 தொகுதிகளின் வாக்காளர்கள் | 1,85,87,045 |
| பதிவான வாக்குகள் (செல்லாதவை உட்பட) | 1,30,85,924 |
| வாக்குப்பதிவு சதவீதம் | 70·4 |

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வெற்றி பெற்ற இடங்கள் | பெற்ற மொத்த வாக்குகள் | செல்லத்தக்க மொத்த வாக்குகளில் சதவீதம் |
|---|---|---|---|---|
| காங்கிரசு | 205 | 138 | 58,15,978 | 46·22 |
| தி. மு. க. | 142 | 50 | 34,13,653 | 27·13 |
| சுதந்திராக் கட்சி | 94 | 6 | 9,93,768 | 7·90 |
| கம்யூனிஸ்ட் | 68 | 2 | 9,65,344 | 7·67 |
| மக்கள் சோச. கட்சி | 21 | — | 1,59,312 | 1·26 |
| தமிழ்த் தேசியக் கட்சி | 8 | — | 24,237 | 0·19 |
| சோச. தொழிலாளர் | 7 | — | 43,186 | 0·34 |
| முன்னேற்றக் கட்சி | 6 | 3 | 1,73,261 | 1·37 |
| சனசங்கம் | 4 | — | 10,743 | 0·08 |
| முஸ்லிம் லீக் | 6 | — | 89,968 | 0·71 |
| குடியரசுக் கட்சி | 4 | — | 57,457 | 0·45 |
| சோசலிஸ்ட் கட்சி | 7 | 1 | 40,794 | 0 32 |
| சுயேச்சைகள் | 134 | 5 | 7,94,491 | 6·31 |
| செல்லுபடியாகாதவாக். | — | — | 5,03,732 | — |

பதிவான மொத்த வாக்குகளில் செல்லாதவை: 3·84 சதவீதம்.

சுயேச்சை அபேட்சகர்கள் 221 பேர்கள் பெற்ற வாக்குகளில் 'நாம் தமிழர் கட்சி' அபேட்சகர்கள் 13 பேர் பெற்ற வாக்குகளு அடங்கும்.

# "மந்திரிகளைவிட நாட்டையே அதிகம் நேசிக்கிறேன்"

## பார்லிமெண்டில் நல்லூர் எம். பி.

**கொழும்பு, வெள்ளி**

**கிரிமினல்சட்ட (விசேஷவிதிகள்)மசோதா பார்லிமெண்டில் நேற்றுக்காலையிலிருந்து இன்று அதிகாலை 4 மணிவரை கமிட்டிநிலையில் ஷரத்துவாரியாகப் பரிசீலனை செய்யப்பட்டது. எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த பல திருத்தப் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன.**

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா பார்லிமெண்டில் கமிட்டி நிலையில் ஷரத்து வாரியாகப் பரிசீலனை செய்யப்பட்டபோது கொட்டாவா எம். பி. திரு. ரொபர்ட் குணவர்த்தன பேசுகையில் வேலைநிறுத்தங்கள் மூலம் தொழிலாள வகுப்பினருக்கு சமசமாஜக் கட்சியினர் துரோகம் செய்கின்றனரென்ருர்."

"அரசாங்கத்துக்கு ஆதரவளித்து பதவி பெறச் செய்த முயற்சி தோல்வியடைந்ததால் சமசமாஜக்கட்சியினர் இப்பொழுது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து கொண்டனா" என்று திரு. ரொபர்ட் குணவர்த்தன கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

இந்த நாட்டில் சர்வாதிகார பாஸிஸ ஆட்சியை அமைப்பதற்கு சதித்திட்ட தலைவர்களின் கூட்டங்களின் பின்னணியில் "கனவான்கள்" மாதிரி சமசமாஜக்கட்சித் தலைவர்கள் உலாவியுள்ளனர். இன்னும் பல விஷயங்களை வெளிப்படுத்த முடியும். ஆனல் அவ்விதம் செய்வதற்கு நான் விரும்பவில்லை.

இலங்கையில் சோஷலிஸத்தை அமைக்க எம். ஈ. பி. தன்னலான உதவிகளைச் செய்யும். தற்போதைய சதித்திட்டத்துக்கெதிராகவே இந்த மசோதாவின் ஷரத்துக்கள் உபயோகிக்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கிரேம்.

சமசமாஜக்கட்சி பெயரளவில்தான் சோஷலிஸ்ட்டாக இருக்கிறது. சென்ற 25 வருடங்களாக அது தொழிலாளருக்குத் துரோகம் செய்து வந்துள்ளது. இப்பொழுது அது 'பாஸிஸ' ராணுவததினருடன் உறவு கொண்டுள்ளது. இந்த நாட்டில் 'பாஸிஸ' சர்வாதிகார ஆட்சியை அமைக்க நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன். எனது சடலத்தின்மீதுதான் இவ்விதம் செய்ய முடியும்.

திரு. சமரக்கொடி: அரசியலைப் பொறுத்தவரை நீர் எப்பொழுதோ இறந்துவிட்டீர்! உமது அரசியல் ஆத்மாசெத்துவிட்டது!

திரு. ரொபர்ட்: அதை 25 வருடங்களாக சமசமாஜக்கட்சிக்குக் கொடுத்துவிட்டேன்!

திரு. ரொபர்ட் குணவர்த்தன மேலும் கூறியதாவது:

அரசாங்கத்தைக் கவிழ்த்து சோஷலிஸ ஆட்சியை அமைப்பதற்கு மக்கள் கிளர்ந்தெழும் போது எந்தச் சட்டத்தைப் பற்றியும் அவர்கள் கவலைப்படமாட்டார்கள். இது இதர நாடுகளின் அனுபவம். மக்களின் உண்மையான எழுச்சியை எந்தச் சட்டத்தினலும் தடுத்துவிட முடியாது.

சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா பேசுகையில், பினல் சட்டத்தை உருவாக்கிய பிரிட்டிஷ்காரர்கள் இன்று இந்த அரசாங்கம் எதிர்நோக்க வேண்டி வந்த சதித்திட்டத்தை எதிர்நோக்க நேர்ந்ததில்லையென்ருர்.

"அரசாங்கத்தை எதிர்த்து சட்டரீதியாகவும் அரசியல் சட்டரீதியாகவும் போராடுவதற்கு மக்களுககு உரிமையிருக்கிறதென்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. வேலைநிறுத்தம் சட்டவிரோதமானதெனக் கருதப்படவல்லை" என்று திரு. சில்வா கூறினர்.

டாக்டர் பெரேரா: அவசரகாலச் சட்டத்தின்கீழ் வேலைநிறுத்தம் சட்டவிரோதம்!

### அவசரகாலநிலைமை

திரு. டி' சில்வா மேலும் பேசுகையில் அவசியமில்லாத நிலைமை ஏற்பட்டதும் அவசரகாலநிலைமை நீடிக்கப்படுமென்றும் சதித்திட்டம் நடைபெற்றிருக்காவிட்டால் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருக்குமென்றும் அனுவசியமாக ஒரு நாளைக்குக்கூட அவசரகாலச் சட்டதகை நீடித்து வைத்திருக்கத் தாங்கள் விரும்பவில்லையென்றும் கூறினர்.

இந்த மசோதாவின் சில அம்சங்களை ஒரு வருடத்துக்கு மேலும் நீடித்து அமுலில்வைத்திருப்பது அவசரகால நிலைமையை நீடிப்பதுபோன்று அவ்வளவு சுலபமானதல்லவென்றும் பார்லிமெண்டின் இரு சபைகளினதும் அங்கீகாரத்துடனேயே நீடிக்க முடியுமென்றும் கூறினர்.

டாக்டர் பெரேரா: அவசரகாலச்சட்டம் மாதந்தோறும் நீடிக்கப்படுகிறது. இந்த மசோதா வருடந்தோறும் நீடிக்கப்படும்.

தனக்கு அதிகாரமிருக்கிறது என்பதால் தனது அதிகாரத்துக்குட்பட்ட எல்லாவற்றையும் அரசாங்கம் செய்யுமென்று அங்கத்தவர்கள் கருத வேண்டாமென்று மசோதாவை எதிர்ப்பவர்களை திரு. சி. பி. டி' சில்வா கேட்டுக்கொண்டார்.

கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

ஜனநாயக நாடுகளில் 'ஏற்பாடுகள்' குற்றமாகக் கருதப்படுவதில்லை. ஒரு துப்பாக்கி வாங்கினல் அது ஒருவரைக் கொலை செய்வதற்காக இருக்கலாம், அல்லது வேட்டையாடுவதற்காகவுமிருக்கலாம்.

அரசாங்கத்தைக் கவிழ்க்க ஒருவர் சதி செய்தால், கவிழ்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்று சாட்டவேண்டிய அவசியமில்லை. இதைத்தான் 'பீனல் சட்டம்' கூறுகிறது. இச் சட்டம் போதாது என்று கூறுபவர்கள் அதைப் பற்றி விளங்கிக்கொள்ளாதவர்கள்.

அவசர காலச் சட்டம் ஒரு பூதாகாரமான சட்டம். அதை நிரப்புவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்ருெரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது.

### பிலிப் கூறியது தவறு

கொழும்பு மத்திய தொகுதி முதலாவது எம். பி. சேர் ராஸிக்பரீத் பேசுகையில் பம்பலப்பிட்டியில் வசிக்கும் முக்தார் பற்றி திரு. பிலிப் குணவர்த்தன கூறியது தவறு என்றும் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்க விரும்புவதாகவும் கூறினர்.

கொழும்பு மத்திய இரண்டாவது எம் பி திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் சமசமாஜக் கட்சியின் திருத்தம் எந்த விதத்திலும் மசோதாவின் குறிப்பிட்ட ஷரத்தின் உள் தன்மையைக் குறைத்துவிடவில்லையென்ருர்.

சமசமாஜக் கட்சியின் திருத்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடபபட்டு 46 வாக்குகள் சாதகமாகவும் 53 வாக்குகள் பாதகமாகவும் பெற்றுத் தோல்வி அடைந்தது.

அரசாங்கத்தின் அடுத்த திருத்தப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்டபோது நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் ஒவ்வொரு மனிதனும் தன்னிடமுள்ள சுயமரியாதையை இழந்துவிட வேண்டும்.

திரு. பிலிப் குணவர்த்தன இதற்குமுன் பல தடவைகளில் மற்றவர்களை பைத்தியக்காரர் என்று கூறியுள்ளார். அவருக்குப் பைத்தியம் என்பதற்கு இது ஒரு உண்மையான சான்று. அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியின் முன்னள் பிரதம வைத்திய அதிகாரி பல தடவைகளில் அவரைப் பரிசோதித்திருக்கிருர். பல தடவைகள் அவருடைய வீட்டுக்கும் சென்று கவனித்திருக்கிருர். ஆனலும் இன்னும் அவர் அபிவிருத்தியடையவில்லை.

### மந்திரிகள் எஜமானர்களா?

டாக்டர் நாகநாதன் மேலும் பேசுகையில் திரு. பிலிப் குணவர்த்தனவின் திருத்தப் பிரேரணை பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் கூறியதாவது:-

இந்த மசோதாவின் ஆருவது பகுதியில் ஒரு பிரிவு மந்திரிகளுக்குத் தீங்கு இழைக்கப்படுவதைத் தடை செய்கிறது. பொது மக்களின் ஊழியர்கள்தான் மந்திரிமார். இதுதான் ஜனநாயகத்தின் கருத்து. அப்படியானல் எஜமானர்கள் என்று மந்திரிமார்கள் தங்களை உச்ச நிலைக்கு வைத்துக்கொள்ளவேண்டும்? தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்கள் ஆட்சி செய்யும் மன்னர்களா? தங்கள் ஊழியர்களுக்கு— மந்திரிகள்—எதிராக எதையும் செய்தால் தூக்கில் தொங்கப்படும் என்ற பயமுறுத்தல் சுயநிர்ணய உரிமையுள்ள பொது மக்கள் முன்னுள்ளது.

இதன் அர்த்தம் என்ன? மகாராணியை அல்லது கவர்னர் ஜெனரலை ஒருவர் கொலை செய்யலாம். அதனல் ஒருவர் சொத்துக்களை இழந்து விடமாட்டார். ஒருவர் ஒரு மந்திரியைக்கொலை செய்ய எத்தனித்தால் அவர் இதர தண்டனைகளுடன் தனதுசொத்துக்களையும் இழந்துவிடுவார்!

டாக்டர் நாகநாதன் மேலும் பேசுகையில் "மந்திரிமார்களைவிட நாட்டையே நான் அதிகம் நேசிக்கிறேன்" என்றுகூறினர்.

கல்முனை எம். பி. ஜனப் ஏ. ஸி. எஸ். ஹமீது பேசுகையில் சதிகாரர்களைப்பிடிப்பது என்ற போர்வையில் மந்திரிமார்கள் தங்களைப்பாதுகாத்துக்கொள்கிருர்களென்ருர்.

"ஒரு மந்திரியின் ஆயாவையோ அப்புவையோ முழுசிப்பார்த்தால் 'மரணதண்டனை' என்று ஒரு திருத்தப்பிரேரணையும் வரக்கூடும்" என்று கல்முனை எம். பி. கூறினர்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, தொழில்அமைதியின்மை, வேலையில்லாத்திண்டாட்டப் பெருக்கம் ஆகியவைகளினல் சதிக்கு அரசாங்கம் வழிவகுத்தது" என்று கூறிய கல்முனை எம். பி. "இப்பொழுது தனது மந்திரிமார்களைபபாதுகாத்துக்கொள்ளமுயற்சி செய்கிறது"என்ருர்.

---


### உகண்டா மந்திரிசபை

#### இந்தியருக்கும் பதவி

கம்பாலா, மார்ச், 2

72 வருடம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த உகண்டா நேற்று சுதந்திரம் பெற்றது.

திரு. பெனடிக்டோ கிவானுக்காவை பிரதம மந்திரியாகக் கொண்ட உகண்டா மந்திரிசபையில் 12 ஆபிரிக்கர்களும், ஒரு பிரிட்டிஷ்காரரும், ஒரு இந்தியரும் அங்கம் வகிக்கின்றனர்.



லண்டனில் நிறுவப்பெற்ற திலகர் நினைவு இல்லத்தைச் சமீபத்தில் மவுண்பட்டன் பிரபு திறந்துவைத்தார். மவுண்பட்டன் பிரபு அங்கு வதியும் பானர்ஜி தம்பதிகளுடன் பேசுவதை படத்தில் காண்க.

---

படைகுறைப்பு மகாநாடு

## பிரஞ்சு அதிபரின் யோசனையை ரஷ்யப் பிரதமர் நிராகரித்தார்

மாஸ்கோ, மார்ச், 2

படை குறைப்புப் பேச்சுவார்த்தை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நான்கு அணு ஆயுத வல்லரசுகளுக்கிடையில் மட்டுமே நடைபெற வேண்டுமென்று பிரஞ்சு ஜனதிபதி ஜெனரல் டிகோல் தெரிவித்த யோசனையை ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவ் நிராகரித்து விட்டார்.

படை குறைப்புப் பேச்சுவார்த்தையில் நான்கு வல்லரசுகளும்தான் முக்கிய அங்கம் வகிக்குமென்பது உண்மைதானென்ருலும் படை குறைப்பு நடவடிக்கையில் நடுநிலைமை நாடுகளுட்பட இதர நாடுகளும் பங்கு கொள்ள வேண்டியது அவசியம் என்று திரு. குருஷ்சேவ் பிரஞ்சு ஜனதிபதிக்கு எழுதியுள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

படை குறைப்பு நான்கு வல்லரசுகள் மட்டுமல்ல இதர நாடுகளும் சம்பந்தப்பட்ட விஷயம் என்று திரு. குருஷ்சேவ் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் இம்மாதம் 14-ந் திகதி ஆரம்பமாகும் 18 நாடுகள் கலந்து கொள்ளும் படை குறைப்பு மகாநாட்டில் அந்தந்த நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொள்ளவேண்டுமென்ற தமது முன்னைய யோசனையை திரு. குருஷ்ஷேவ் இக்கடிதத்தில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

படை குறைப்பு மகாநாடு நடைபெறும் சமயத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அதிபர்களைச் சந்தித்துப் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் சோவியத் பிரதமர் தெரிவித்துள்ளார்.

---

## மார்ச் 15ல் தமிழ்நாட்டில் புதிய மந்திரிசபை

### காமராஜ் ராஜினமாவை சமர்ப்பித்தார்

சென்னை, மார்ச் 1

தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. காமராஜ் தமது மந்திரிசபையின் ராஜினமாவை இன்று கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதியிடம் சமர்ப்பித்தார். புதிய மந்திரிசபை அமைக்கும்வரை பதவியிலிருக்குமாறு கவர்னர் அவரைக் கேட்டுக கொண்டார்.

திரு. காமராஜ், பின் நிருபர்களிடம் பேசுகையில், இம் மாதம் 7-ம் திகதி சட்டசபை காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் தெரிவு நடைபெறுமென்றும், வருகிற 15-ம் தேதிக்கு முன் புதிய மந்திரிசபை அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார் மாத இறுதியில் சபாநாயகர், உதவி சபாநாயகர் தெரிவு நடைபெறுமென்றும் அவர் கூறினர்.

இன்று தமிழ்நாட்டு கீழ்சபை கலைக்கப்பட்டது. வருகிற 30-ம் தேதி மேல்சபை அங்கத்தினர் தெரிவு நடைபெறும்.

— —

லண்டன் மார்ச். 3

வடக்கு அங்கோலாவில் தேசியவாதிகளுக்கும், போர்த்துகீஸிய சிப்பாய்களுக்குமிடையில் நேற்று பல இடங்களில் சண்டை. நடந்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

## அல்ஜீரியாவில் 65 பேர் மாண்டனர்

அல்ஜீரியர்ஸ், மார்ச், 2

அல்ஜீரிய சண்டை நிறுத்த உடன்படிக்கை பற்றி அல்ஜீரிய தேசியவாதிகளின் மந்திரிசபை இன்று டுனிஸில் கூடி தொடர்ந்து பரிசீலனை செய்தது. பிரான்சுடன் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கான வழிவகைகள்பற்றி அவர்கள் ஆராய்ந்தனர்.

நேற்று ஓரானில் ஐந்து இடங்களில் குண்டுகள் வெடித்தன பீதியடைந்த முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் கூச்சலிட்டனர்.

இரண்டு தினங்களுக்குமுன் இரண்டு எறிகுண்டுகள் வீசப்பட்டதால் 30 முஸ்லிம்கள் மாண்டுபோன 'புதிய நகரத்தில்' 'சலானுக்குத் தூக்குமேடை' 'அல்ஜீரியா முஸ்லிம்களுக்கே!" என்ற கோஷங்கள் கிளம்பின.

நேற்று முன்தினம் அல்ஜீரியாவின் பல்வேறிடங்களிலும் நிகழ்ந்த குண்டு வீச்சினல் 55 முஸ்லிம்களுட்பட 65 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென்றும் 98 பேர் காயமடைந்திருக்கலாமென்றும் ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பொன் வாக்கு

கடவுள் ஒருவரே என்று நான் நம்புகிறேன். அதனால் மனித சமூகம் முழுவதுமே ஒன்றுதான் என்று கருதுகிறேன்.

— காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 20 உ. ( 3 - 3 - 62)


## ஜனநாயக முறை

புதிய கவர்னர் ஜெனரல் மே. க. கோபல்லவா நேற்று பதவி ஏற்றபின் நாட்டுக்கு விடுத்த ஒரு செய்தியில் ஜனநாயக முறையில் முக்கியத்தை வற்புறுத்தி அதைப் பாதுகாக்க வேண்டுமென்று சரியாகச் சொன்னார்.

இந்த ஜனநாயகம் நமக்கு வெகுவாகப் புதிது. பலநூற்றுண்டுகளாக ஜனநாயக ஆட்சி முறையில் ஈடுபட்ட நாடுகளே பல தவறுகள் செய்கின்றன. அப்படியிருக்க புதிதாக ஜனநாயக சுதந்திரம் பெற்ற இலங்கை போன்ற நாடுகளில் தவறுகள் நடப்பது வியப்பல்ல. தவறுகள் காரணமாக ஜனநாயக முறையே கூடாதென்றும் சர்வாதிகார ஆட்சியே வேண்டுமென்றும் யாரும் கூறமாட்டார்கள்.

சென்னையில் அண்மையிலே ஒரு பெரிய கூட்டத்தில் பாரதப்பிரதமர் நேருஜி பேசுகையில், ஜனநாயக முறையில் பல குறைகளுள்ளனவென்பதை ஒப்புக் கொண்டார். என்றாலும், 'இதைவிட மேலானவேறு ஆட்சிமுறை இருப்பதாகத் தமக்குத் தோன்றவில்லை' யென்றார். இந்த முறையிலுள்ள குறைகளை அனுபவத்தில் உணர்ந்து அவற்றைப் படிப்படியாக நீக்கிக் கொள்ள எல்லா முயற்சிகளும் செய்வதே விவேகமாகுமென்றும் சரியாக அறிவுறுத்தினார்.

திரு. கோபல்லவா விடுத்த செய்தியில், பல பல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து தீர்த்துக் கொள்ளலாமென்றார். புத்தர் பெருமான் காட்டிய அன்பு நெறி எல்லாப் பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வழி காட்டுமென்றும் சொன்னார். வேறு பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் இன்றுள்ள பிரச்சினைகள் அதிக சிக்கலானவையன்று. கவர்னர் ஜெனரல் கூறுவது போல், பலதரப்பினரும் நல்லெண்ணத்துடனே நேரில்கூடி பேச்சுவார்த்தைகள் நடத்தினால், இப்பிரச்சினைகளை சுலபமாகத் தீர்த்துக் கொள்ளவும், முட்டுக்கட்டைகள் நீங்கி நாடு முன்னேறவும் முடியும்.

ஜனநாயக ஆட்சியிலே சாதாரணமாக சிறுபான்மையோர் தங்கள் அடிப்படை உரிமைகளுக்கு ஆபத்து ஏற்படுமென்று அஞ்சி, பாதுகாப்புக் கோருவது இயற்கை. இலங்கையிலே மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதுடன் அரசியலைத் திருத்தி அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஒரு கமிட்டியும் நியமிக்கப்பெற்றுள்ளது. பழைய அனுபவங்களையும், கவர்னர் ஜெனரலின் மேலான யோசனைகளையும் பயன்படுத்தி னால், ஏற்கதோர் புதிய அரசியல் திட்டத்தை வகுக்கவும், நாட்டிலுள்ள எல்லா சமூகத்தவரும் நல்லெண்ணத்துடன் ஒத்துழைத்து, நாட்டை முன்னேற்றக்கூடிய காலம் சீக்கிரத்தில் ஏற்படலாம்.

# மகாசிவராத்திரி மகிமை

( கு. வை. ஆ. சர்மா )

மக்கள் உயிர்வாழ்வில் முக்கிய நோக்கம் சிறப்பாக வாழ்வதேயாம். வாழ்வு சிறப்பாகச் செய்யும் மனிதமுயற்சி மிகவிரிவுடையதாயினும் அதுவே சிலபோது தீதாகி முடியவும் காண்கிறோம். காரணம் என்ன? மனிதன் எல்லைக்குட்பட்ட அறிவுடையவன். மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி மனிதனை வழிநடத்துகிறது. அந்த சக்தியை உடையவரே பரம்பொருள். பரம பொருளாகிய இறைவனை எவரெவர் எப்பெயர்சொல்லி வழிபட்டாலும் அவர்களுக்கெல்லாம் அவரவராகி அருள்செய்பவரே சிவபெருமான். "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்ற அருள வாக்கு இதனை வலியுறுத்தும். அதனால், சைவசமயத்தவர் மாத்திரமே சிவ பரம்பொருளை வழிபடுகின்றனர். என்று ஒதுக்கிவிட முடியாது. எல்லா மதத்தவர்களும் எல்லாச் சீவராசிகளும் செய்கின்ற வழிபாடெல்லாம் மாதொரு பாகனாகிய சிவபெருமானை வெளிப்படையாகவேனும்மறைமுகமாகவேனும் குறிக்கதனவேயாம். சில வழிபாட்டுக்குரியக் சிறந்த தினங்களுள் முதன்மை வாய்ந்தது சிவராத்திரி எனப்படும். சிவராத்திரி வரலாறு மிகமிக விரிவுடையது. சுருக்கமாகச் சில கூறுவாம்.

சகல உலகிற்குந் தாயாகிய உமாதேவியார் ஒரு பிரமகற்ப காலத்தில் எல்லாம் சிவசக்தியில் ஒடுங்கியபோது, சிவபரம் பொருளைக்குறித்துவழிபாடாற்றிய இரவு முதன் முதல் சிவராத்திரி என வழங்கலாயிற்று. மேலும், பிரமா, விஷ்ணு ஆகிய இருவரும் சனித்தனி அகங்கரித்துத் தாமே பரம்பொருளென்று இறுமாந்து போரிட்டகாலை அவ்விருவர் வாயிலாக உலகுக்கு உண்மை புலப்படுத்தத் திருவுளங் கொண்டார் சிவபிரான். அதனால், அவ்விருவரது மத்தியில் ஆதியும் அந்தமும் அறியவொண்ணாதஅளப்பரும் ஜோதியொன்று தோன்றியதைக்கண்டு அவ்விருவரும் தயங்கிப் போரை நிறுத்தினர். பிரமாவும், விஷ்ணுவும் அந்த ஒளிப்பிளம்பின் முடியையும், அடியையும் முறையே தேடி அலைந்தனர். அவற்றைக் கண்டிலர், பாவம் உண்மையை உணர்ந்து, தமது பூசலைமறந்து ஜோதியை வணங்கினர்.

சோதி வடிவம் சிவலிங்கவடிவாயிற்று. அச் சிவலிங்க வடிவத்தினின்று சிவபிரான்தோற்றி தம்மை வணங்கிநிற்கும் பிரம, விஷ்ணுக்களுக்கு அருள் சுரந்தார். அத்தினமே பின்னர் சிவராத்திரி எனப்படுவதாயிற்று. அன்றிரவு நடுச்சாமவேளையே இலிங்கோற்பவகாலமாகும். மாசிமாதத்தில் வரும் அபரபக்க சதுர்த்தசி பொருந்திய தினம் மகாசிவராத்திரி எனப்படும் இவ்வருடம் 4-3-62 ஆகியமாசிமாதம்21ந் திகதி ஞாயிற்றுக்கிழமைமகாசிவராத்திரி காலமாகும்.

மகாசிவராத்திரி சிவபிரானைக்குறித்து விசேட வழிபாடு செய்வதற்குரிய ஒரு புனித நாளாகும். சிவ விரதங்களுள் மிகமிக மேன்மை வாய்ந்தது சிவராத்திரி விரதம்.

விரதமென்றால் என்ன? இன்றைய தினத்தில் இன்னதைத்தான் செய்வேன். இதைச் செய்யேன் என்று மக்கள் தமது இயல்புக்குப்பொருந்துமாறு தம்மனத்தில் திடமாக நிச்சயித்துக்கொள்ளுவதே அதன்படி வழிபாடு செய்வதேயாகும். சிவராத்திரி தினத்தில் மக்கள் புறக்கருமங்களைச் சுருக்கி, அகம்புறந் தூயராகி உணவை முற்றாக விட்டு உபவாசமாகவேனும், இயலாதவர் உணவை இயன்றவரை சுருக்கியேனும் மனத்தை ஒருவழிப்படுத்திச் சிவபிரானைத் தியானித்து வழிபாடாற்றுவது முறையாகும். அத்தினம் முழுவதும் நித்திரைசெய்யாதுவிழிப்புடன் ஆசாரமாக விருந்து தமது இயல்புக்கேற்பச் சிவபூஜை செய்தல், சிவபஞ்சாட்சர செபஞ்செய்தல், சிவாலய தரிசனஞ் செய்தல், சிவாலயத் தொண்டுசெய்தல், சிவதோத்திரஞ் செய்தல், சிவபுராணங் கேட்டல் என்பன செய்யத்தக்கவை. சிவராத்திரி தினத்தில் சிவபிரானுக்கு அபுத்திபூர்வமாகவேனும்,-அதாவது, நினையாதவண்ணம், ஒருவில்வதளத்தினால் அருட்சிதத்தவர் எய்தும் பேறு எல்லையற்றது என்று புராணங்கள் விதந்துகூறுகின்றன. எனவே, மெய்யன்புடன் வில்வார்ச்சனை செய்தவர் அடையும் பலனைக் குறிக்கவும்வேண்டுமா?

இவ்வுண்மைகளை அறியாத சிலர் சிவராத்திரி தினத்தில் பட்டினியாக இருக்கவேண்டியதுதானே என்று நினைத்து அவ்வாறு இருந்துகொண்டு புலன்களை வேறு விஷயங்களில் செலுத்தியும், வேறு சிலர் பட்டினியிருக்கத் தம்மாலாகாவிடினும் சிவராத்திரியில் நித்திரை விழிப்பது தானே முறைமை என்று நினைத்துக்கொண்டு அன்றிரவில் படம்பார்த்தல் முதலிய வினைதப் பொழுதுபோக்கில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளுகிறார்கள். அவை முற்றுந் தவறான செயல்களாம். சிவராத்திரியில் சிவவழிபாடொன்றே செய்யத்தக்கது. அதற்கு அங்கமான செயல்களும் செய்யலாம். பட்டினிகிடத்தல், நித்திரை விழித்தல் என்பன சிவவழிபாட்டுக்குத் துணைச்செயல்களாக அமையவேண்டுமேயன்றி அவை மாத்திரம் சிவ வழிபாடாக முடியாது. இவற்றை உணர்ந்து சிவராத்திரி தினத்தைச் சிவவழிபாட்டுக்கே உரிமையாக்கி நாமெல்லாம் பயனடைவோமாக.

சிவ வழிபாட்டுக்குரிய சிவலிங்காஷ்டகம் என்னும் தோத்திரம் வடமொழியிலுள்ளது. வடமொழிப் பயிற்சி இல்லாதவரும் அதனைப் பாராயணஞ்செய்து பயனடையவேண்டும் என்னும் அவாவினால் அதன் சாரமும், சந்தமும் இயன்றவரையும் மாறாமல் தமிழில் செய்யுள்வடிவமாக அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:-

### சிவலிங்காஷ்டகம்.

தமிழ் மொழி பெயர்ப்பு

1. அயனரி அமரர் அருச்சித லிங்கம்
நிமலத் தூய்நெறி நீளொளிர் லிங்கம்
துயர்தரு பிறவி தொலைத்தருள் லிங்கம்
சயமுறப் போற்றுதும் சதாசிவ லிங்கம்.

2. ஏமுற முனிவரர் ஏத்திடு லிங்கம்
காமனு முய்வகை கருணைகொள் லிங்கம்

(6ம் பக்கம் பார்க்க)

ஜயாறன் எழுதுவது

மேனனா? கிருபளானியா? என்ற கேள்வி இந்தியாவில் மட்டுமல்ல உலகிலே பல நாடுகளிலும் எழுந்தன. இக் கேள்விக்கு வடபம்பாய் பொது மக்கள் பதில் அளித்துவிட்டனர். ஒரு லட்சத்து 45 ஆயிரம் அதிகப்படி வாக்குகளால், மேனன் தான் என்ற பதில் கிடைத்திருக்கிறது.

இதைக் கேட்கையில் சிலர் சிரிக்கலாம். சிலர் அழலாம். எனக்கோ சிரித்துக்கொண்டே அழவேண்டும் போல் உள்ளது. மேனன் வென்றதைப் பற்றி மகிழ்ச்சிதான். ஆனால் ஆசார்ய கிருபளானி இந்திய பார்லிமெண்டில் இல்லாமற் போவாரே என்று மிக வருத்தம்.

அவர் காங்கிரஸ் தலைவராகவும் 12 வருடகாலம் காரியதரிசியாகவும் இருந்தவர். சுயநலமற்ற தியாகி. குற்றமெனக் கண்டதை தயவு தாட்சண்யமின்றி வன்மையாகக் கண்டிப்பார். ஜனநாயக ஆட்சி நன்கு நடைபெற இப்பேற்பட்டவர்கள் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டும். அவர் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டிருக்கலாமே என்று தோன்றியது. என்ன செய்யலாம்! இந்த ஜனநாயக திருவிளையாடலில் இன்னும் என்னென்ன நடக்குமோ!

* * *

கொழும்பிலே ஒரு வர்த்தகர் இரவில் தமது கடைக்கு முன்பாக காரில் ஏறியிருக்கையில் யாரோ ஒருவன் வெடிகுண்டு போட்டுவிட்டு ஓடிவிட்டதாயும், குண்டு வெடித்து வர்த்தகர் மாண்டதாயும், மற்றிருவருக்கும் பலத்த காயமென்றும் செய்தி கேட்டு திடுக்கிட்டேன்.

பொலிசார் 100 கஜ தூரத்தில் நின்றதும், குண்டு போட்டவன் தப்பிவிட்டானாம்! ஐந்து அல்லது பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு இப்படி படுகொலை செய்யும் பாதகர்கள் இருப்பதாக நண்பர் கூறுகிறார்.

இந்நிலை நீடித்தால் பொது மக்கள் நிம்மதியாக வாழ முடியாது போகும். பொலிசார் இவ்வித பாதகர்களைக் கண்டுபிடித்து, இவ்வித காரியங்கள் நடவாமல் தடுக்க எல்லா நடவடிக்கையும் எடுத்து பொதுமக்கள் நிம்மதியாக வாழ முடியுமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது அவர்களது மேலான கடமை. அவசர நெருக்கடிகாலத்திலும் இவ்விதம் நடப்பதிலிருந்து வெடி குண்டர்களுக்கு எவ்வளவு துணிச்சல் உள்ளதென்பதைக் காட்டுகின்றது.

* * *

நாளை ஞாயிற்றுக் கிழமை மகா சிவராத்திரி. பல சிவாலயங்களிலும் நான்குகால பூசை முதலியன நடக்கும். திருக்கேதீச்சரத்துக்குச் செல்லவேண்டுமென்று ஆசை. கொழும்பு கொம்பெனித்தெரு முருகன் கோவிலில், சிவராத்திரி தொண்டர் சபையினர், சென்ற வருடம் போல இவ்வாண்டிலும் விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்திருக்கிறார்கள் கூட்டுப் பிரார்த்தனை, பேச்சு, பக்திப்பாடல், நடனம், கதா காலட்சேபம் முதலியவைகளும், பூசை வழிபாடுகளும் நடப்பதாயும் அறிவிக்கின்றனர். திருப்பனந்தாள் கல்லூரி பேராசிரியர் வித்துவான் சுந்தரேசம்பிள்ளை இதற்கென விசேஷமாக வந்து, 3 நாட்கள் விரிவுரை ஆற்றுகின்றார் பலே பேஷ்! ஈழநாட்டில் சைவமும் சமய பக்தியும் வளருவதற்கு இவையெல்லாம் நல்ல அத்தாட்சிகள்.

ரத்தினக் கம்பளம்

## 'காட்டில் எறித்த நிலவு'

பதுமன்

இனிய பலகீதங்கள் இசைப்பதும், எண்ணிலாத பலகனவுகளைக் காண்பதும், பால் போன்ற திரைகளை அள்ளி எறியும் கடற்கரைகளிலும் கீதங்கள் பாடிச்செல்லும் ஆற்றோரங்களிலும் திரிந்து உலகை எல்லாம் நடாத்தி வருபவர்கள் புலவர்களே என ஆங்கிலக் கவிஞர் ஒருவர் பாடியிருக்கின்றார்.

'நனிபட உலகை நாளுமே
யாட்டி
நடத்துவோ ரம்ம நாங்களே
போலும்'

என அப்பாடலில் ஓர் அடியை தமிழ்ப் பேரறிஞர் சு நடேச பிள்ளை தமிழில் தந்துள்ளார்

இதனை எதற்காக எழுதுகின்றேன் என்றால் போக்குவரத்து உதவி மந்திரி திரு. டி பி. தென்னக்கூன் எழுத்தாளர்களைப் பற்றி கண்டியிற் கூறியிருப்பதினால் தான்.

கண்டி இலக்கிய வெளியீட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் உதவி மந்திரி பேசும் போது, பத்திரிகைகளும் பதிப்பகங்களும் புதிய எழுத்தாளர் பரம்பரை ஒன்றை ஆக்குவதற்கு உதவி செய்வதில்லையெனக் கூறியிருப்பதையே இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

### கசப்பான உண்மை

இலங்கையிலுள்ள எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் எதுவித ஆதரவும் கிடைப்பதில்லையெனவும் அவர்களின் திறமை எல்லாம் காட்டில் எறித்த பால் நிலவுபோல் ஆகிவிடுகின்றதெனவும் அவர் மிகுந்த கவலையுடன் தெரிவித்திருக்கின்றார்.

அவர் இன்னுமோர் உண்மையை அம்பலப்படுத்தியிருந்தார். ஓர் எழுத்தாளரின் ஆரம்ப முயற்சிகளுக்கு ஆதரவு கிடைப்பதில்லையெனவும், அவர் தனது சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்துவிட்டால் அவருக்கும் பின்னால் குடல்தெறிக்க ஓடிப் புகழ்மாலை சூட்டுவது வழக்கமாகிவிட்டதெனவும் அவர் கசப்பான அந்த உண்மையை மிக இதமாக எடுத்துக்காட்டியிருந்தார்.

இத்தனைக்கும் புலவர்களும் எழுத்தாளர்களும்தான் இவ்வுலகை நடாத்துகின்றனர் என ஆங்கிலக் கவிஞர் ஒருவர் கூறியிருக்கின்றார். எத்தனையோ கலைஞர்களது ஆற்றல்கள் அனைத்தும் காட்டில் எறித்த நிலவுபோலாகிவிடுகின்றதென தொமஸ் கிறே என்ற மற்றோர் ஆங்கிலக் கவிவாணரும் அருமையாகப் பாடியிருக்கின்றார். உதவி மந்திரியும் கவிஞர் கிறேயின் பாடலையே கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் நினைவூட்டி எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் அவர்கள் உயிரோடு வாழும்போதே கௌரவிக்க வேண்டுமென்பதை நாசுக்காகச் சொல்லியிருக்கின்றார்.

### எழுத்தாளர் பங்கு

யார் எதைக் கூறினாலும் தென்கிழக்கு ஆசியநாடுகளில் இப்போது இலக்கிய மலர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்கமும் தனிப்பட்ட கழகங்களும் எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. அனுபவம் வாய்ந்த எழுத்தாள நண்பர் ஒருவர் கூறியிருப்பது போல, மேனாடுகளில் ரூஸோ, வால்டேர், கார்ல்மார்க்ஸ், சாள்ஸ் டிக்கன்ஸ், விக்டர் ஹியூகோ, போன்றோரின் வலிமை மிக்க எழுத்துக்கள் தேசத்தின் தலைவிதியை மாற்றியிருக்கின்றன சமுதாயத்தின் அமைப்பையே காலத்துக்கேற்ப மாற்றியிருக்கின்றன. ஆகவே, எழுத்தாளர்களாகிய நாமும் சுதந்திர ஆட்சியில் நடைபெறும் தேசச் சீரமைப்புக்கு உதவும் முறையில்

(6ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அ.சைஸ் நீதிமன்றம்

# 'மொகிடீனை எதிரிக் கூண்டில் நிற்பவர்தான் சுட்டார்'

## வவனியா கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியாவில் வசிக்கும் பி. கே. மொஹிடீன் என்பவரை கடந்த வருடம் ஜூன் மாதம் 1-ம் திகதி. கோதண்டார் நொச்சிக்குளம் என்னுமிடத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெதய்தாக சுப்பையா தியாகராசா என்பவர்மீது குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர்.

எதிரிதரப்பில் திரு. டி. கணேசலிங்கம் திரு. கே. ஜெகந்நாதனின் உதவியுடன் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானர்.

சின்னப்புதுக்குளததில் வசிக்கும் லொறிச்சாரதியான திரு. ஏ. அம்பலவாணர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் கந்தையா என்பவருக்குச் சொந்தமான லொறிக்குச் சாரதியாக இருந்தேன். நான் பி.கே. மொஹிடீனுடன் கோதண்டார் நொச்சிகுளத்திற்கு லொறியில் சென்றேன். எங்களுடன் அப்பாஸ், ஆதன், பொன்னம்பலம், லொறிக்கிளினர், தொழிலாளிகள் ஆகியோரும் வந்தனர். இந்த லொறியில் சின்னத்தம்பி என்பவருக்கு விலாசமிடப்பட்ட மூடைகள் இருந்தன. கோதண்டார் கொச்சிக்குளம் வவனியாப்பட்டினத்திலிருந்து 14 மைல்கள் தூரமிருக்கும். லொறிக்குள் 18 மூடை நெல் நிரப்பப்பட்டிருந்தது. காலை 11 மணிக்கு வவனியாவை அடைந்தோம் நான் லொறியை ஓட்டிக் கொண்டு சென்றேன். மொஹிடீன் இடதுகோடியில் இறுதியாக இருந்தார். இடது தோழில் துப்பாக்கியுடன் நின்ற ஒருவர் லொறியை நிற்பாட்டினர். "எங்கே போகிறீர்கள்" என்று அவர் கேட்டார். திடீரென அவர் மொஹிடீனுக்குச் சுட்டார். எதிரிகள் கூண்டில் நி பவர்தான் அந்த மனிதர். சுட்டவுடன் அவர் ஓடிவிட்டார். அப்பொழுது காலை 11-30 மணியிருக்கும். சிறிதுநேரத்திற்கு நாமெல்லாம் திக்பிரமைபிடித்தவர்களாக எதுவும் செய்யாதுநின்றோம். சூடுபட்ட மொஹிடீன் லொறிக்குள் வீழ்ந்து கிடந்தார். எதிரி காட்டுக்குள் மறைந்துவிட்டார். காயமடைந்தவரைப் பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச்சென்றேன். பொலிஸ் இன்ஸ்பெக்டர் அவரை ஆஸபத்திரிக்கு அனுப்பிவைத்தார். காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் மரணமானர். இதன்பின் பொலிஸாருடன் சசன்று கமத்தில் சூடுமிதித்துக்கொண்டு நின்ற எதிரியைக் காட்டிக் கொடுத்தேன். அப்பொழுது இரவு 9 மணியிருக்கும்.

டாக்டர் டி. தர்மரத்தினம் சாட்சியமளிக்கையில் வெளியாக பெரியளவில் ஒரு காயமும் சிறியளவில் 4 காயங்ளும், உள்ளூர பல காயங்களும் இருந்தனவென்றும் இருதயம், இரத்தாசயம், ஈரல், சிறுகுடல் ஆகியன சிதறியிருந்தன என்றும் வைத்திய உதவி எதுவும் உயிர் சேதத்லத தடுக்க முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

இறந்தவரின் சகோதரரான பி. கே. பூசாக் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

இறந்தவரான மொகிடீன் எனது மூத்த சகோதரர். இருவரும் சம்பவம் நடைபெறுவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பே வவனியாவில் வியாபாரம் செய்து வந்தோம். இருவரும் கூட்டுப்பங்காளராகவே பலசரக்குக் கடை நடத்தினேம். எதிரி எங்கள் கடையில் கடனுக்கும் ரொக்கத்திற்கும் சாமான் கொள்வனவு செய்வது வழக்கம். ஆனல் சம்பவம் நடைபெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பே அவர் எங்கள் கடைக்கு வராமல் விட்டுவிட்டார். அவரிடமிருந்து வருமதியாக பணமிருந்தது.

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கத்தின் குழுக்கு விசாரணைக்குப் பதிலளிக்கையில் சாட்சி தெரிவித்ததாவது:-

கடந்த எட்டு வருட காலமாக வவனியாவில் நான் வசித்து வருகிறேன். எனது தமையனுர் 20 வருட காலமாக வசித்துவந்தார். நாங்கள் மலையாளத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள். நான் மாடுகள் வாங்கிக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதில்லை. வவனியாவிலுள்ள மலையாள முஸ்லிம்களுக்கு எனது சகோதரர் தலைவராக இருந்தார் என்பதை நான் மறுக்கிறேன். சுமார் 100 மலையாள முஸ்லிம்கள் வவனியா பட்டினத்தில் வசிக்கிருர்கள். வவனியாவிலுள்ள வியாபார நிலையங்கள் அத்தனையும் மலையாள முஸ்லிம்களினுடையது என்பதையும் மறுக்கிறேன். ஆனல் அங்குள்ள மலையாள முஸ்லிம்கள் அனைவரும் வியாபாரம் செய்பவர்கள்தாம். சேனதிராசா என்பவரையோ சேனதி என்பவரையோ எனக்குத் தெரியாது. எதிரியை எனக்குக் கடந்த 8 வருட காலமாகத் தெரியும். கடைக்கு வருவதை எதிரி நிற்பாட்டிக் கொண்டதன்பின் இரு தடவைகள் எதிரியைக் கண்டிருக்கிறேன். அம்பலவாணர் எனது சகோதரரை லொறியில் கூட்டிச் சென்ருர். நான் ஆஸ்பத்திரியில் லொறிக்குள் சடலம் கிடப்பதைப் பார்த்தேன்.

நான் இது விஷயமாக எதிரியைச் சந்தேகிக்கவில்லை. பொலிஸார் எதிரியைக்காட்டிய பின்பே சந்தேகித்தேன்.

அரசாங்க பரிசோதகர் திரு. சபாநடேசனும் சாட்சியமளித்தார்.

இங்குவையில் மேல்விசாரணை திங்கட்கிழமைவரை ஒத்தி வைக்கப்பட்டது

# இராமநாதன் விடுதி மாணவிகள் ஆட்சேபம்

## தரம்குறைந்த உணவு வழங்கப்பட்டதாம்

பேராதனை, வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழகத்து "இராமநாதன் விடுதி மாணவிகளுக்குத் தரம் குறைந்த உணவு வழங்கப்பட்டதால் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக அவர்கள் மத்தியான உணவு உண்ண மறுத்தார்கள்.

கடந்த சில தினங்களாக அந்த மகளிர் விடுதியில் படுமோசமான போசனம் வழங்கப்பட்டுவந்ததாகவும் அதனல் பல மாணவிகள் வியாதிக்கும் உள்ளாகினர். தரங்குறைந்த உணவு வழங்கியசற்கு ஆர்ப்பாட்டம் தெரிவிக்கும் முகமாக மாணவிகள் மத்தியான போசனத்துக்குச் செல்லவில்லை. தாமே தயாரித்த உணவுகளை உண்டனர். பலர் கண்டிக்குச் சென்று மத்தியான போசனம் உண்டார்கள்.

மத்தியான சோற்றுப் போசனம் மோசமானதென்றும் அதை உண்டதால் தமக்கும் வியாதி ஏற்பட்டுள்ளதாகவும் இராமநாதன் விடுதித் தலைவியும் கூறியுள்ளார்.

பெப்ரவரி 16-ந் திகதி தொடக்கமாகப் பல்கலைக் கழக விநியோக ஸ்தாபனமே அரிசி வழங்கி வந்ததாகத் தெரிகிறது. மாணவர்கள் சபை கண்டிக் கச்சேரியிலிருந்து அறிந்துகொண்டதன் பேரில் தரம் குறைந்த அரிசி விநியோகிக்கப்படவில்லை எனத் தெரிய வந்துள்ளது. ஆனல் தமக்குத் தரம் குறைந்த அரிசியே கிடைத்ததாக பல்கலைக்கழக விநியோக ஸ்தாகபனம் கூறியுள்ளது.

உணவுக் கஷ்டம் பற்றி மாணவர்கள்சபை பல்கலைக்கழக உபவேந்தருக்கு முறையிட்டுள்ளது.

# 'மக்களுக்கு மக்கள் அஞ்சுவதாலேயே விரோதம் அதிகரிக்கின்றது'

## அமெரிக்க மாணவிக்கு ஸ்ரீ நேரு கடிதம்

நியூயோர்க், மார்ச், 2

"மக்களுக்கு மக்கள் அஞ்சுவதாலேயே உலகப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன."

இவ்வாறு அமெரிக்க மாணவியொருவருக்குத் தாம் அனுப்பிய கடிதத்தில் பிரதமர் நேரு குறிப்பிட்டுள்ளார்.

ப்ரிஸில்லா ஜிப்ரி என்னும் இந்த அமெரிக்க மாணவி (வயது 17) தமது உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு ஆயத்தம் செய்து வருகிருர். "நேருவின் நடுநிலைமைக் கொள்கை"- அது உண்மையா? அல்லது கட்டுக்கதையா? என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை வரைய இந்த மாணவி முனைந்த சமயத்தில் இவர் பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

"பிரச்சினை மிகுந்த இன்றைய உலக அரசியல் மேடையில் தாங்கள் என்ன இடம் வகிக்கிறீர்கள்?" என இந்த அமெரிக்க மாணவி நேருவைக் கேட்டு எழுதியிருந்தார். பிரதமர் நேரு தமது பதிலில் தெரிவித்துள்ளதாவது:-

"எந்த விஷயத்திலும் நாம் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப் பிடித்துவருகிறேம் என்று சொல்லிவிட முடியாது. எந்த ஆக்கிரமிப்புக் கட்சியினரையும் நாங்கள் சேர்ந்தவர்களல்ல என்று கூறிவிடுவது சரியாகும்."

"கம்யூனிஸ்ட் முறைகளை நான் ஆதரிக்கவில்லை. ஆனல் கம்யூனிஸ்ட நாடுகள் பற்றிப் பாராமுகமாகவும் இருந்துவிடக் கூடாது. சகவாழ்க்கை உணர்வின் அடிப்படையில் அந்நாடுகளுடனும் தொடர்பு கொண்டு நமது நலன்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்."

"மக்களுக்கு மக்கள் அஞ்சுவதாலேயே வெறுப்பும் விரோதமும் ஏற்படுகின்றன. ஒரு தரப்பினர் நட்பு முறையில் நடந்து கொண்டால் மற்றைய தரப்பும் நட்புறவைத் தானகவே ஏற்படுத்திக் கொள்ளும்."

பிரதமர் நேருவின் கடிதத்துக்குப் பின்னர் கூட 'நேருஜியின் நடுநிலைமைக் கொள்கை-வெறும் பேச்சு' என்று தொனிக்கும் வகையில் அமெரிக்க மாணவி கட்டுரை வரையப் போவதாகத் தெரியவருகிறது.

# புதிய வட ரொடீஷிய அரசியல் சட்டம்

லண்டன், மார்ச், 2

அரசாங்கம் வட ரொடீஷியாவின் புதிய அரசியல் சட்ட மாற்றங்களை அறிவித்தது.

இந்நாட்டிற்கு சகல சாதியினர் கொண்ட அரசியல் முறையை அளிக்க வேண்டுமென்ற அரசாங்க நோக்கம் மாறவில்லை. அதன்படியே அரசியல் சட்டத்தில், ஐரோப்பியர்களுக்கோ அல்லது ஆபிரிக்கர்களுக்கோ பெரும்பான்மை வாக்குக் கிடைக்கும் என்பது பற்றிய உத்தரவாதம் கொடுக்கப்படமாட்டாது.

இதுதான் அரசாங்கத்தின் தீர்மான முடிவு. இதை விட வேருெரு மாற்றத்தையும் நாம் செய்ய முற்படமாட்டோம்" எனக் குடியேற்ற நாடுகளின் முடிக்குரிய காரியதரிசி திரு. ரெஜினட் மோட்லிங் பொது மக்கள் சபையிற் கூறினர்.

### முக்கிய ஸ்தானங்கள்

45 அங்கத்தினர் கொண்ட கவுன்ஸில் 15 முக்கிய ஸ்தானங்களுக்கு போட்டியிடும் அபேட்சகர்களின் தகுதிகளடங்கிய அரசியல் சட்ட மாற்றங்கள் முதன் முதலில் கடந்த வருடம் பெப்ரவரி முதலில் அறிவிக்கப்பட்டுப் பின்னர் ஜூன் மாதம் வெள்ளை அறிக்கையாகப் பிரசுரிக்கப்பட்டது.

இப்புதிய அரசியல் திட்டத்தின்படி, மேல் தேர்தல் தொகுதி (முக்கியமாக ஐரோப்பியர்) கீழ் தேர்தல் தொகுதி (முக்கியமாக ஆபிரிக்கர்) என இரு தொகுதிகளும் ஒவ்வொன்றும் 15 தேசிய அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும்.

முன்னர், தேசிய இருக்கைகளுக்கு இடம்பெறவிரும்புவோர் மேல், கீழ் தொகுதியினரின் எட்டில் ஒன்று அல்லது 400 வாக்குகளைப் பெறவேண்டும். ஆபிரிக்க தேசியவாதிகளின் ஆட்சேபனையின் பேரில் இவ் எண்ணிக்கை இன்னும் வெகுவாக பத்திலொன்ருகக் குறைக்கப்பட்டது.

# போத்தல் விளக்குக்கு இளம்பெண் பலி

வவனியா, வெள்ளி

வவனியாவைச் சேர்ந்த 24 வய்துடைய இளம் பெண்ணுன கமலேஸ்வரியின் சேலையில் போர்த்தல் விளக்கு தவறுதலாக சரிந்து விழுந்ததால் அவரது சேலைதீப்பற்றிக் கொண்டது.

அவர் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனல் அங்கு எரிகாயங்களினல் மரணமானர்.

### மற்ருெருவர் பலி

மனேன்மனி (55) என்ற மற்ருெரு பெண் போர்த்தல் விளக்கில் சுருட்டுப் பற்ற வைக்க முனைந்தபோது தவறுதலாக அவரது சேலையில் தீப்பற்றிக் கொண்டதால் அவர் பலத்த எரிகாயங்களுக்குக் குள்ளானர்.

ஆஸபத்திரிக்கு அவர் விரைந்து எடுத்துச் செல்லப்பட் போது அங்கு அவர் மரணமானர்.

# இரத்தினக்கம்பளம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கியப் படைப்புக்களைப் படைத்து உதவவேண்டும்.

### ஓர் ஏக்கம்

இதனை எழுதும்போது இலங்கைப் பல்கலைகழகத்தில் விஞ்ஞான எஞ்சினியரிங் பட்டதாரி வகுப்புகளை தமிழிலும் சிங்களத்திலும் நடாத்துவதற்குப் போதிய பாடப்புத்தகங்கள் இல்லையே என்ற ஏக்கத்தை இங்கு குறிப்பிடாதிருக்க முடியவில்லை. விஞ்ஞான பாடங்களை மொழிபெயர்க்கும் முயற்சி ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதாக அறிகின்றேன். பல்கலைக் கழகத்தில் முதலாவது ஆண்டு உபயோகத்துக்கான 89 பாடப்புத்தகங்களை மொழிபெயர்க்கும் வேலையை சுயபாஷை இலாகா மேற்கொண்டதெனத் தெரிகிறது. ஆனல் அவை அடுத்த ஐந்து ஆண்டுகளில் தானும் மொழிபெயர்க்கப்படுமோ என்பது சந்தேகமே.

நினைத்த மாத்திரத்திலே எதனையும் நிறைவேற்றிவிட முடியாது. மெல்ல மெல்லத்தான் காரியங்களைப் பார்க்க வேண்டும். எனவே இந்த மொழிபெயர்ப்பு வேலையும் விரைவில் நிறைவேறுமென எதிர்பார்க்கலாம்.

# மகாசிவராத்திரி மகிமை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்மையில் ராவணன் நினைப்பழி லிங்கம்
சார்வுறப் போற்றும் சதாசிவ லிங்கம்.

3. தேங்கிய நறுமணந் திளைத்தருள் லிங்கம்
ஓங்கிய புத்தி உயர்த்தருள் லிங்கம்
அத்தர் சுராசுரர்ச் சிறப்பருள் லிங்கம்
சத்துறப் போற்றும் சதாசிவ லிங்கம்.

4. ஏமத் தொளிர்மணி ஏற்றிடு லிங்கம்
தாம வாரப்பதி தரித்திடு லிங்கம்
அகந்தைகொள் தக்கனை அழித்தருள் லிங்கம்
சகந்தினிற் போற்றும் சதாசிவ லிங்கம்.

5. குங்கும சந்தனக் கோலங்கொள் லிங்கம்
தங்கிய தாமரைத் தாமங்கொள லிங்கம்
சஞ்சித பழவினைச் சரக்கழி லிங்கம்
தஞ்சமாப் போற்றுதுஞ் தாசிவ லிங்கம்.

6. தேவகணஞ் செய்யுஞ் சேவைகொள் லிங்கம்
மேவாப் பத்தியில் மிளிரா லிங்கம்
சூரிய கோடிச் சுடர்விடு லிங்கம்
சாரப் போற்றுதுஞ் சதாசிவ லிங்கம்.

7. அட்ட தளத்தினில் அமர்ந்திடு லிங்கம்
கட்ட வுயிர்க் கருள் கருரண லிங்கம்
எட்டுள வாமிடி எரித்தருள் லிங்கம்
சட்டமாப் போற்றுதுஞ் சதாசிவ லிங்கம்.

8. தேவகுருச் சுரர் தேர்ந்திடு லிங்கம்
காவரு மலர்கொடு களிப்பருள் லிங்கம்
ஏவரும் என்றும் ஏத்திடு லிங்கம்
சார்வருள் பேருற்றுதுஞ் சதாசிவ லிங்கம்.

**பயன்**

புண்ணியலிங் காஷ்டகத்தைப் போற்றுசிவ சந்நிதியில்
எண்ணிய பேரன்பின் இசைத்திடுவோர்—கண்ணியமார்
இம்பருயர் வாழ்வெய்தி எல்லைசிவ லோகடைவர்
எம்பிரான் சாயுச்சியம் ஏய்ந்து.

### நயினாதீவுகிராமசபையின் புதிய உபதலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

நயினாதீவு கிராமச்சபையின் இவ்வாண்டு உபதலைவராக திரு. மு. இராமலிங்கம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# குடிசைக் கைத்தொழில் இலாகா கடனுதவி வழங்கும்

கொழும்பு, வெள்ளி

குடிசைக்கைத்தொழில் செய்யவிருப்புவர்களுக்கு உதவுமுகமாக கடனுதவி வழங்கிராமாவிருத்தி குடிசைக் கைத்தொழில் இலாகா முடிவு செய்துள்ளது.

மேற்படி இலாகா பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி கீழ்கண்ட விதத்தில் கடனுதவி வழங்கப்படும்.

## தனிப்பட்டவர்களுக்கு கடனுதவி

1. விண்ணப்பக்காரரின் தனிப்பட்ட பிணையின் பேரில் ரூ 1000 வரையான கடனுதவி வழங்கப்படும்.

2. ஒருவர் 1000 ரூபாவுக்கும் 3000 ரூபாவுக்குமிடையில் கடன் பெறவேண்டின் கடன் பெறும் தொகையிலும் பார்க்க இருமடங்கு பெறுமதியான அசைவற்ற ஆதனத்தை பிணை வைக்க வேண்டும்.

3. ஒருவர் 3,000 ரூபாவுக்கும் 25,000 ரூபாவுக்குமிடையில் கடனுதவி பெறவிரும்பினால் கடனுதவி பெறும் தொகையின் 75 சதவீதமான பெறுமதிக்கான அசைவற்ற ஆதனத்தை பிணைவைக்க வேண்டும். இந்தக் கடனுதவிப் பணத்துக்கு வருடமொன்றுக்கு 4 சதவீத வட்டி அறவிடப்படும்.

இலாகா வாடகை அடிப்படையில் இயந்திர சாதனங்களும் கொடுத்து உதவும்.

## மகிலசமிதிக்கு அரசாங்க உதவி போதாது

அக்மீமன, வெள்ளி

"மகிலசமிதிக்கு அரசாங்கம் உதவிப்பணமாக வழங்கும் 100,000 ரூபாய் சமிதிக்குப் போதுமானதல்ல. இன்னும் அதிகமான பணத்தை அரசாங்கம் வழங்கவேண்டும்."

இவ்வாறு திரு. நீல்டீ அல்விஸ் (எம். பி) அக்மீமனவில் நடைபெற்ற லங்கா மகில சமிதியின் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

தோல்வியில் முடிந்த சதித்திட்டம் பற்றிக்குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:

"அரசாங்கத்தைக்கவிழ்ப்பதற்கு பொலிஸ் படையைச் சேர்ந்தவர்களும் ராணுவத்தை சேர்ந்தவர்களும் செய்த சதித்திட்டம் இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு பெரிய சதித்திட்டமாகும். மக்களிடையே ஒற்றுமை இல்லாமையும், அரசாங்கத்திடம் அவர்களுக்கு உள்ள நம்பிக்கையீனமுமே சதிமுயற்சிக்குக்காரணம். அரசாங்கத்தைக்கவிழ்க்கும் திட்டமொன்றுக்கு இந்தக்காரணங்களே பொலிஸ் இராணுவ படையினருக்குசதித்திட்டத்தைமேற்கொள்ளத்தூண்டுகோலாக இருந்தவை."

கே. தர்மவசா தேரோ பேசுகையில் கிராம மக்களுக்கு மகிலசமிதி நல்ல சேவை செய்து வருவதாகக்கூறினர்.

## கதவு யன்னல் உற்பத்திசாலை

கொழும்பு, வெள்ளி

யன்னல்கள் கதவுநிலைகள் கதவுகள் பூட்டுகள் போன்ற கடினப்பொருள்கள் உற்பத்திசாலை ஒன்றை நிறுவுவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

விவசாயத்துக்குத் தேவைப்படும் உபகரணப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கெனச் சிறியகூட்டுறவு ஸ்தாபனங்களை நிறுவும்படி கைத்தொழில் இலாகாவின் அபிவிருத்திப் பகுதி சிபார்சு செய்துள்ளது.

விவசாய உபகரணப் பொருள்கள் வெலிசறையிலுள்ள அரசாங்க நிலையத்தில் மட்டும் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

## புதிய கவர்னர் ஜெனரலுக்கு பௌத்த காங்கிரஸ் ஆசிச்செய்தி

கொழும்பு, வெள்ளி

"தாங்கள் இலங்கையின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டது குறித்து நாம்மிக மகிழ்ச்சியடைகின்றோம். இங்கு இப் பதவியைப் பொறுப்பேற்கும் முதலாவது பௌத்த மதத்தவர் தாங்களே. இது எமக்கு மேலும் மகிழ்ச்சியைத் தருகிறது."

பௌத்த காங்கிரஸ், புதிய கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பௌத்தமதக் கொள்கைப்படி சகிப்புத்தன்மையுடனும் அன்புடனும் இலங்கையை நல்வழி நடத்த நல் ஒளி துணைபுரியட்டும்!

# சீமெந்து கார்ப்பரேஷனுக்கு ரூ. 17 லட்சம் லாபம்

கொழும்பு, வெள்ளி

1960 ஏப்ரலுக்கும், 1961 மார்ச்சுக்குமிடையில் இலங்கை சிமெந்து கார்ப்பரேஷன் 17 லட்சம ரூபாய் லாபம் அடைந்துள்ளது என்க் கார்ப்பரேஷன் தலைவர் திரு ஜீ. பி அமரசிங்கா தெரிவித்துள்ளார். இதே காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்தின் தொகை 81,639 தொன். மொத்தமாக சுமார் ஒன்றரைக் கோடி இதனல் வருமானமாகிற்று. சிமெந்து உற்பத்தியிலேதான் அதிகம் வருவாய் கிடைப்பதாகவும் கார்ப்பரேஷன் தலைவர் கூறியுள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்து உற்பத்திச்சாலையை விஸ்தரிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. காலியிலுள்ள சிமெந்து தொழிற்சாலைக்கும் விஸ்தரிப்பு வேலைகள் செய்யப்பட்டு தவருகின்றன. விஸ்தரிப்பு வேலைகள் முடிவடைந்ததும் காங்கேசன்துறை தொழிற்சாலையில் வருடமொன்றுக்கு 275,000 தொன் உற்பத்தி செய்யப்படும். இதில் 100,000 தொன் கடல்மூலம் காலித் தொழிற்சாலைக்கு 'பாக்கிங்' வினியோகம் ஆகியவற்றுக்கென அனுப்பப்படும்.

புத்தளத்தில் இரண்டாவது தொழிற்சாலை நிறுவும் வேலைகளையும் கார்ப்பரேஷன் மேற்கொண்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையிலும் வருடமொன்றுக்கு 200,000 தொன் சிமெந்து உற்பத்தி செய்யப்படுமாம்.

## அவசரகாலநிலைமை தேவையில்லாவிடின் ரத்துச் செய்வோம்

—சபை முதல்வர்

கொழும்பு. வெள்ளி

"அவசரகால நிலைமையை எவ்வளவு விரைவில் ரத்துச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் அதை ரத்துச்செய்ய அரசாங்கம் விரும்பியுள்ளது" என சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா நேற்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.

டாக்டர் என் எம். பெரேரா, திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா ஆகியோரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே திரு ஸி. பி. டி' சில்வா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. டி' சில்வா மேலும் கூறியதாவது:-.

சதித் திட்டம் நடைபெற்றிருக்காவிட்டால் நாம் எப்பொழுதோ அவசரகால நிலைமையை ரத்துச் செய்திருப்போம். அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு 10 மாதங்களாகிவிட்டன. தேவையின்றி ஒருநாளாகிலும் அவசரகால நிலைமையை அரசாங்கம் நீடித்து வைத்திருக்கமாட்டாது.

## கடும் குளிரையும் பொருட்படுத்தாது இலங்கை நடனம்பார்க்க பெரும் கூட்டம்

மினஸோட்டா, மார்ச்.2

இங்கு நடைபெற்ற இலங்கை நாட்டியக்குழுவின் நடனத்தை பார்ப்பதற்காக கடும்குளிரையும் பொருட்படுத்தாது மூவாயிரத்துக்கு அதிகப்பட்ட நகரமக்கள் மினஸோட்டா பல்கலைக் கழகத்தில் கூடியிருந்தனர்.

ஆசிய சங்கத்தின் கலை நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் தற்பொழுது அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்யும் இலங்கை நாட்டியக் குழுவினர், இதுவரை அமெரிக்காவில் அநேக இடங்களுக்கு விஜயம்செய்துள்ளனர்.

நடனமன்றத்தில் கூடியிருந்த ரசிகர்களில் மாணவர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், நடனரசிகர்களும், சர்வதேச கலை நிகழ்ச்சி ஆதரவாளர்களும் பெரும் திரளாகக் காணப்பட்டனர்.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## மிருகபலி

ஈழத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் "ஈழநாடு" பத்திரிகையில் 4-2-62-ல் வெளியான மிருக பலியைப் போற்றிய கடிதம், எல்லாச் சமயாபிமானிகளுக்கும் ஒரு'சவால்' விடுத்திருக்கிறது.

பலவகையான சீர்திருத்தங்கள் நிலவிவரும் இக்காலம் பலியிடுதலையும் ஒரு முக்கிய விஷயமாகக் கருதி இதனை நிறுத்தத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு எல்லோரும் முன்வருதல் வேண்டும். இவ்வருடமே இக்கொடூரத்தை யாழ்ப்பாணத்தில் நீக்கியருளளாமெனலாம்.

கொழும்பு, வ. செ. கந்தையா.

* * *

## இந்தியத் தேர்தல் முடிவுகள்

இன்று தங்கள் பத்திரிகையில "இந்தியத் தேர்தல் முடிவுகள்" என்ற ஆசிரியத் தலையங்கம் கண்டு மிகவும் வருந்துகிறேன். அண்டை நாட்டில் காங்கிரஸ் பெற்ற வெற்றி கண்டு தாங்கள் பொருமைப்படுவது போலும் மக்க மீண்டும் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் காங்கிரஸிடமே ஆட்சிப பொறுப்பை கொடுத்திருப்பதற்கு தாங்கள் கொடுக்கும் காரணங்கள் உண்மையை மறைத்து சொல்லுவதாகவும் இருக்கிறது.

மக்கள் காங்கிரஸை ஆதரித்ததின் காரணம் பதினைந்து ஆண்டுகளில் காங்கிரஸ் அரசாங்கம் நாட்டுக்கும நாட்டு மக்களுக்கும் செய்த நற்பணியே யன்றி வேறொன்றுமில்லை. உடுக்க உடையும் உண்ண உணவும் 44 கோடி மக்களுக்கும் பஞ்சமில்லை. உணவு உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தியை அடைந்துவிட்டது. உடை விஷயத்தின் தன் தேவைக்கு மேல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உடை உற்பத்தியில் உலகத்தில் மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கிறது என்றால் அது காங்கிரஸின் மாபெரும் சாதனையாகும். ஓர் குறுகிய காலத்தில் இந்தியாவின் முன்னேற்றங்கண்டு உலகம் ஆச்சிரியப்படுகிறது. அத்தகைய கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவது இந்தியாவிற்கு நல்லகாலமே ஆகும்.

யாழ்ப்பாணம், உ. வே. சாமி.

## இளம்பிள்ளை வாதம் கொழும்பில் பரவுகிறது

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் இளம்பிள்ளை வாதநோய் அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

கடந்த மாதம் 20 பேர்களுக்கு இந்தநோய் கண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மாநகரசபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா இதுபற்றித் தெரிவிக்கையில் இளம்பிள்ளை வாதநோய் திடீரெனப் பரவியிருப்பதற்குக் காரணம் என்னவெனக் குறிப்பிட்டுச் சொல்வதற்கொன்றுமில்லை. சென்ற மாதம் இந்த நோய் இரட்டிப்பாகப் பரவியுள்ளது.

மாநகரசபை வைத்திய அதிகாரிகள் இதுபற்றி ஆராய்ந்து வருகிறார்கள். இன்னும் இருநாட்களில் இதுசம்பந்தமான விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார்கள்.

இந்நோயைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நோய் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டாலும் இது ஒரு தொற்றுநோய் எனக் கூறிவிடமுடியாது.



## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 3-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7 30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 வி. சிவராசா - பாட்டு, 10-15 கோஷ்டிகானம்.

ஞாயிறு 4-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கதம்ப இசை, 11-30 'சிறுவர்மலர்'.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-15 பாங்கு, 6-30 தாளவாத்தியக்கச்சேரி.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-30 சரஸ்வதிதேவி வயித்திலிங்கம் - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'காமினி' - நாடகம், 9-45 தேர்ந்த இசை, 10-00 மகாசிவராத்திரி விசேஷ நிகழ்ச்சி - திருக்கேதீஸ்வர அஞ்சல்.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

சனி 3-3-62

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கோயமுத்தூர் பி. ஆர். ராமச்சந்திரராவ் - வயலின.

பகல் 1-00 துதிப்பாடல்கள். 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 கோயம்புத்தூர் பி. ஆர். ராமச்சந்திரராவ் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'புதிய சுவர்க்கம்' - நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகில்பாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 4-3-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 எம். கே. ராஜாமணி - கிளாரினெட், 8-15 கௌரி குப்புஸ்வாமி-பாட்டு.

பகல் 12-00 நீங்கள்கேட்டவை, 12-30 சூரியகாந்தி கதம்பநிகழ்ச்சி, .-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சென்னை அஞ்சல்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சிறுத்தொண்ட நாயனார் கதை - சங்கீத உபந்யாசம், 9-15 வாத்திய இசை. 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

---

## வெள்ள அகதிகளுக்கு இந்திய உதவி

புதுடில்லி, மார்ச், 2

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹம்பர்க் நகரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக ஆயிரம் ரூத்தல் தேயிலையையும் ஐயாயிரம் போர்வைகளையும் ஐயாயிரம் துண்டுகளையும் இந்தியா நன்கொடையாக வழங்கியுள்ளது.

## காங்கேசன்துறையில் புதிய பொலிஸ் காரியாலயம்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறையில் புதிய பொலிஸ் காரியாலயத்தை வடபகுதி பொலிஸ் சுப்பிறிண்டன்ட் திரு. ஜே. வான் வெஸ்ட் இன்று குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். வலவெட்டித்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, சங்கானை, சுன்னாகம் ஆகிய நிலையங்களை இப்பொலிஸ் காரியாலயம் மேற்பார்வை செய்யும்.

## ஆசிரியர்சங்க அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்த் தொகுதியிலுள்ள தமிழ் ஆசிரியர்களைக் கொண்ட ஆசிரியர் சங்கமொன்று அமைப்பதெனவும் அச்சங்கம் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துடன் அகில இலங்கைத் தமிழாசிரியசங்கக்கிளையாக இயங்க வேண்டுமெனவும் வியாழக் கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டம் 1-3-62 வியாழக்கிழமை பிற்பகல் செடிகதெரு மெதடிஸ்ட் மிஷன் பாடசாலையில் கூடியது. நல்லூர்த் தொகுதிப் பாடசாலைகளின் பிரதிநிதிகள் பலரும் சமுகங் கொடுத்திருந்தனர்.

சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தை இம்மாதம் 15ம் திகதி நடத்தவதெனத் தீ ... மானிக்கப்பட்ட ...

## ஜெனிவா மகாநாடு மேனன் செல்வார்

புதுடில்லி, மார்ச், 2

இம்மாதம் 14-ந் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கும் 18 நாடுகளின் படைக்குறைப்பு மகாநாட்டில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் கலந்து கொள்வார்.

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொள்ளும் அமெரிக்க தூதுக்கோஷ்டிக்கு அமெரிக்க வெளிவிவகாரமந்திரி திரு. டீன் றஸ்க தலைமை வகிப்பார்.

## அயூப்-தயாள் சந்திப்பு

கராச்சி, மார்ச், 2

பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. ர ... தயாள் நேற்று பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேசினார்.

காஷ்மீர் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்துமாறு இந்தியாவுக்கு ... பிரதமர் நேரு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அழைப்பை திரு. தயாள் ஜனாதிபதி அயூப்கானிடம் முறைப்படி கொடுத்தார்.




# சைக்கிளில் சென்றவர் விழுந்து மரணம்

## வடலியடைப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சைக்கிள் வண்டியின் பின் ஆசனத்தில் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கையில் சைக்கிளால், தவறி விழுந்து தெருவோரக்கிடங்குகளில் பலமாக அடிபட்டுக்கொண்டதால் ஒருவர் மரணமானார். இச்சம்பவம் வடலியடைப்பில் நடைபெற்றுள்ளது.

வடலியடைப்பைச் சேர்ந்த கே. சின்னத்துரை என்னும் கமக்காரர் எம். பாலசிங்கம் என்பவர் சென்றுகொண்டிருந்த சைக்கிள்வண்டியின் பின் சீட்டில் அமர்ந்து சென்றுகொண்டிருந்தபோது சின்னத்துரை என்பவர் தவறி விழுந்து தெருவீதியில் மோதிக்கொண்டார். தலையிலும் மார்பு எலும்புகளிலும் அவருக்குப் பலமான காயங்கள் ஏற்பட்டன.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சி. கதிரவேலு தீர்ப்பளிக்கையில், சைக்கிளிலிருந்து தவறி விழுந்து மாண்டதால் மார்பெலும்பும் முதுகெலும்பும் முறிந்தன என்றும் மூளையும் முதுகுத்தண்டமும் பாதிக்கப்பட்டு மரணம் சம்பவித்ததென்றும் கூறினர்.

எம். பாலசிங்கம் சாட்சியமளிக்கையில் தாம் சின்னத்துரையை சித்தங்கேணிச் சந்திவரை கூட்டிச் செல்வதற்கு சைக்கிளில் ஏற்றியதாகவும், சந்தியில் இறங்கி பஸ் எடுத்து ஓட்டுச்சுட்டானுக்கு சின்னத்துரை செல்லவிருந்ததாகவும் கூறினர். வீதியில் கிடங்குகள் இருந்ததாகவும், கிடங்குகளுக்கு அப்புறமாகச் செல்ல முயன்றபோது சைக்கிளின் முன் சில்லு கிடங்குகளைத் தாண்டிப் பாய்ந்ததால் சின்னத்துரை விழுந்துகொண்டார் எனவும் சாட்சி கூறினர்.

---

## த்த சுவாதீனம் அற்றவர்களுக்கு

### ஆயுள்வேத வைத்தியம்

வெல்லம்பிட்டியா, வெள்ளி

ஆரம்பநிலையிலுள்ள சித்த சுவாதீனமற்றவர்களுக்குஆயுள்வேத வைத்திய சிகிச்சை அளிப்பது பற்றி அங்கொடை ஆஸ்பத்திரி ஆலோசனைக் கமிட்டி சமீபத்தில் கூடியபோது ஆலோசனை செய்தது.

ஆரம்ப நிலையிலுள்ள சித்த சுவாதீனமற்றவர்களுக்குஆயுள்வேத வைத்திய சிகிச்சை அளிக்கப்படவேண்டுமெனசுகாதார சேவை டைரக்டருக்கு ஆலோசனை தெரிவிப்பதென கமிட்டி தீர்மானித்தது.

---

## பர்மாவில் திடீர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணம் கோரி பிரதமர் ஊநூவுக்கு விடுத்த எச்சரிக்கையில் தாங்கள் நடவடிக்கையிலிறங்கப்போவதாய் அறிவித்தார்கள் என்றும், இதைத் தொடர்ந்து அரசியல் நிலை மோசமாகியதே ராணுவப் புரட்சிக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. ராணுவப் புரட்சிக்குப் பின் பல ஷான் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஜெனரல் நேவின் தனது ரேடியோ உரையில் புரட்சி பற்றி அறிவித்தபின், பொதுமக்களை அமைதியாய் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ராணுவ அதிகாரிகளைக் கொண்ட புரட்சி சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மந்திரி சபை ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஆட்சியைக் கைப்பற்றிய நேவின் இத்துடன் இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறார். 1958-60-ம் ஆண்டுக்கிடையில் 18 மாதங்கள் அவர் பர்மா காபந்து அரசாங்கத்தின் பிரதமராய் இருந்தார். அப்போது ஊநூவின் ஆளும் கட்சியில் பிளவு ஏற்பட்டிருந்ததால் புதிய தேர்தல் நடைபெறும் வரை ஜெனரல் நேவினைப் பதவியிலிருக்குமாறு பிரதமர் கேட்டிருந்தார். பின் நடைபெற்ற தேர்தலில் ஊநூ வெற்றிபெற்றதைத் தொடர்ந்து ஜெனரல் நேவின் ராஜினமாச் செய்தார்.

பர்மா சுதந்திரம் அடைந்ததிலிருந்து முப்படைகளுக்கும் ஜெனரல் நேவின் பிரதம சேனதிபதியாய் இருந்துவருகிறார் ரங்கூனில் இப்போது அமைதி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

---

## 3 மந்திரிகள் மீண்டும் வெற்றி

புதிடில்லி, மார்ச் 2

மத்திய மந்திரிகளான திரு. எஸ். கே. பாடீல், டாக்டர் ஹூமாயூன்கபீர், திரு பஞ்சாமராவ்தேஷ்முக் ஆகியோர் லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## கோபால் ரெட்டி

சென்னை, மார்ச் 2

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த மத்திய மந்திரி திரு. கோபால் ரெட்டி குணமடைந்ததைத் தொடர்ந்து, ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினர்.

---

## குற்றவாளிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தமான பாரதூரமான விஷயங்களில் நடைபெறும் விசாரணையின் அரசாங்கம் பங்கு கொள்ளாவிட்டால் அது மக்களின் அடிப்படை உரிமையை மறுப்பதாகும்.

சதித்திட்டம் சம்பந்தமாக அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டது. இந்த நடவடிக்கையின் முடிவு மசோதா நிறைவேறிய பின் தெரியும். குற்றச்சாட்டுகளும் எதிர்க்குற்றச்சாட்டுகளும் சுமத்திக் கொண்டிருப்பதைவிட்டு சதித்திட்டத்தின் பாரதூரமான தன்மையை அங்கத்தினர்கள் சிந்திப்பது விவேகமானது. சதித்திட்டம் வெற்றிபெறவில்லை என்பதுபற்றிச் சிலர் வருத்தமடைந்திருப்பது உண்மை. வேறுசிலர் அரசாங்கம் சதிகாரர்களைப் பாதுகாக்க முயற்சிப்பது தவறு எனவும் சொல்கிறார்கள்.

அவர்கள் நியாயமான முறையில் விசாரிக்கப்படுவார்கள். சதித்திட்டம்பற்றி அறிவிக்கப்பட்டபின் சில ஐரோப்பியர்கள் இலங்கையை விட்டுச் செல்ல உத்தேசித்திருப்பதாய் பத்திரிகையில் அறிவித்திருந்தனர். அவர்கள் சதியுடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என நான் சொல்லவில்லை. சதிகாரர்கள்மீது தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றியே சதிபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. கர்னல் சேரம் விசாரணைக்குக் கொண்டுவரப்படுவார். அவர் குற்றவாளியா இல்லையா என்பது அப்போது தெரியும்.

இப்போது அவர் ஒரு கைதியைப் போலவே நடத்தப்படுகிறார். திரு. ஜயவர்த்தன. கர்னல் சேரத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார். சேரம் என்ன செய்வார் என்பதுபற்றி அவருக்குத் தெரியும்போல் இருக்கிறது. நிபந்தனையுடன் அவர் மன்னிப்பளிக்கப்படுவாரா என்ற கேள்வி கபடத்தனமானது. சேரத்துக்கு எந்த மன்னிப்பும் அளிப்பது அரசாங்கத்தின் உத்தேசமல்ல.

திரு. வி. ஏ. கந்தையா கூறியதாவது:

ஒரு பாவமும் அறியாதவர்கள் தூக்கிலிடப்படக்கூடாது என்ற அடிப்படையில் இம்மசோதா விவாதிக்கப்படவேண்டும். மசோதாவை உண்மையாகவும், சுயேச்சையான மனப்பான்மையுடனும் கவனிக்குமாறு அரசாங்க அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சதிசம்பந்தமாக குற்றவாளிகள் எனக் காணப்படுபவர்களுக்கு அப்பீல் உரிமையை இல்லாமல் செய்வது அரசாங்கத்தின் உத்தேசம் என்பது தெளிவு. அரசியலமைப்பைவிட மனித சுதந்திரமே மேலானது. எனவே இவ்விஷயத்தில் விரும்பியவர்கள் அப்பீல் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

---

## ஆசிரியை இடமாற்றம்

உடுப்பிட்டி, வெள்ளி

உரும்பிராய் இந்துக்கல்லூரி உதவி ஆசிரியை செல்வி பராசக்தி இளையதம்பி இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டார்.

---

## கல்விக் கமிஷன்

உடுப்பிட்டி, வெள்ளி

தேசிய கல்விக் கமிஷனைச் சேர்ந்த பன்னிரு உறுப்பினர் பேராசிரியர் திரு. ஜே. ஈ. ஜயசூரியாவின் தலைமையின் கீழ் சமீபத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலுள்ள விஞ்ஞான கூடத்தைப் பார்வையிட்டனர்.

இவர்களுடன் வட பிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரமும் வந்திருந்தார்.

---

## புதிய கவர்னர் ஜெனரலுக்கு வாழ்த்து

### யாழ்ப்பாண மேயர் அனுப்பினர்

யாழ்ப்பாணம், சனி

புதிய கவர்னர் ஜெனரலுக்கு வாழ்த்துத் தெரிவித்து யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் ஓர் தந்திச் செய்தியை நேற்று அனுப்பிவைத்துள்ளார். மாநகரசபை சார்பில் இந்த வாழ்த்துச்செய்தி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை அங்கத்தவரான ஹாஜி வி. எம். அபுசாலியும் முஸ்லிம்கள் சார்பிலும் ஓர் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்துள்ளார்.

---

## காரைநகரில் நெல் அறுவடை

காரைநகர், வெள்ளி

காலபோக நெல் அறுவடை காரைநகரில் கடந்த இரண்டு வாரமாக நடைபெறுகிறது. விவசாயிகள் கடந்த வருடங்களைப்போன்று இவ்வருடம் போதிய நெல் விளைவைப் பெறமுடியவில்லை. போதிய மழையின்மையே இதற்குக் காரணம். மேடான வயல் நிலங்களையுடைய விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலையை அடைந்துவிட்டார்கள்.

---

## முடிவுகள் வெளிவந்தன

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற ஆசிரியர் ஆலோசகர் பரீட்சை முடிவுகள் வெளியாயின.

ஆங்கிலம் மூலம் பரீட்சை எழுதிய ஐவர் மட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து சித்தியடைந்துள்ளனர்.

---

## கடித்த பாம்பை காட்சிக்கு வைத்தார்

உடுப்பிட்டி, வெள்ளி

அர்ச் சம்பத்திரிசியார் கல்லூரி, 7-ம் வகுப்பு மாணவனான எம். ஆர். எட்வேட் மரியதாசன் (வயது 12) நடுநிசியில் தன்னைக் கடித்த விஷநாகம் ஒன்றை வாலில் கட்டி போத்தலொன்றில் அடைத்துக் காட்சிக்கு வைத்திருக்கிறார்.

பாம்பு கடித்ததும் கோழி முட்டைகளும் அதன்பின் நீரும் பருகிய இவர் மயங்கிக் கிடந்த பாம்பை உடனே சுருக்கிட்டுத் தூக்கிவிட்டார்.

---

## மானிப்பாய் கிராமசபை புதிய உபதலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற சனிக்கிழமை நடந்த மானிப்பாய் கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில், 1962-ம் ஆண்டு உபதலைவர் தெரிவு நிகழ்ச்சிநிரலில் இடம் பெற்றது. சென்ற ஆண்டு உபதலைவராக இருந்த க. மழவராயர், தொடர்ந்து ஒருவரே உபதலைவராக இருப்பது நல்லதல்ல, ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொருவருக்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று கூறி திரு. கமலேந்திரனின் பெயரைப் பிரேரித்தார். திரு. செ. அமுதலிங்கம் ஆமோதித்தார். சபை ஏகமனதாக திரு. கமலேந்திரனை 1962-ம் ஆண்டு உபதலைவராகத் தெரிவு செய்தது.


# இப்பொழுது திரையிடப்படுகிறது!

பிளாஸா (வெள்ளவத்தை) | கெபிட்டல் (கொழும்பு) | வெம்பிளி (கண்டி)

விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) | சஹாரா (சிலாபம்)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனா நடித்த




2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 தியேட்டர்களில்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, நடித்த

# பாச மலர்

மனோஹரா (யாழ்ப்பாணம்)

ஜெமினிகணேசன் சாவித்திரி நடித்த

## குணசுந்தரி



# ஈழநாடு

**4-3-62 வாரப்பதிப்பில்**

★ கல்லூரி அனுபவம் — பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்

★ தமிழருக்கு உபஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நல்லுபதேசம். — கே. பி. ஹரன்

★ தேசிய இலக்கியம் — வை. அ. கைலாசநாதன்

★ சுமைதாங்கி — சிறுகதை

★ தமிழணங்கு — கவிதை

பூஜ்யம் தபால் : உலகமேடை

கலை அரங்கம் : சிறுவர் பூங்கா

இன்னும் பல சுவையான அம்சங்கள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாத 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.